வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு


Eelanadu — ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 03.09.2024 செவ்வாய்க்கிழமை | இதழ் : 247 | பக்கங்கள் : 12

# தமிழ் அரசு மத்திய குழுவின் தீர்மானத்தை ஏற்கமுடியாது!

## லண்டனிலிருந்து சிறீதரன் அறிவிப்பு



லண்டன், செப்ரெம்பர் 03

ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பதாக இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழு எடுத்த தீர்மானத்தை ஏற்கமுடியாது என்று அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், தமிழ் அரசுக் கட்சியின் தீர்மானத்துக்கான எதிர்வினை வரும் நாட்களில் வெளிப்படுத்தப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

லண்டனில் தற்போது தங்கியிருக்கும் சிறீதரன் எம். பி. தனது கட்சியான தமிழ் அரசுக் கட்சியின் தீர்மானம் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு

11

## புலமைப்பரிசில் பரீட்சை அட்டவணை வெளியானது!

கொழும்பு, செப். 03

நடப்பு ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை நேரஅட்டவணையை பரீட்சைகள் திணைக்களம் வெளியிட்டுள்ளது.

இதன்படி எதிர்வரும் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை புலமைப்பரிசில் பரீட்சை நடைபெறும். வினாத்தாள் பகுதி -1 காலை 9.30 மணிக்கு ஆரம்பித்து முற்பகல் 10.45 மணிக்கு நிறைவடையும். வினாத்தாள் பகுதி - 2 முற்பகல்

11

## ரூ. 109ஐ விட அதிக செலவு செய்தால் பதவி பறிபோகும்!

கொழும்பு, செப். 03

ஜனாதிபதித் தேர்தலுக்காக வாக்காளர் ஒருவருக்கு 109 ரூபாயை வேட்பாளர் செலவிட முடியும். அதற்கும் அதிகமாக செலவு செய்ததாக நீதிமன்றம் நிரூபித்தால், அவர் பதவியை இழக்க நேரிடும். மூன்று வருட காலத்துக்கு அந்த வேட்பாளர் தனது குடிமையுரிமையையும் இழக்க நேரிடும் என்று தேர்தல்கள் ஆணையாளர் சமன் சிறீ ரத்நாயக்க எச்சரித்துள்ளார்.

கண்டியில் நடந்த நிகழ்வு ஒன்றில் "தேர்தல் செல வின விவரம் எவ்வாறு செயல்படுகின்றது?",

11

## சிறீதரனின் நிலைப்பாடும் கருத்தில் கொள்ளப்பட்டது!

### சீ. வீ. கே. சிவஞானம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 03

சிறீதரன் எம். பியின் நிலைப்பாடு உள்ளிட்ட பல விடயங்களையும் கருத்தில்கொண்டே இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தீர்மானம் எடுக்கப்பட்டது என்று அந்தக் கட்சியின் மூத்த துணைத் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் தெரிவித்துள்ளார்.

நேற்று ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட சீ. வீ. கே. சிவஞானம் மேலும் தெரிவிக்கையில்,

கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா இந்தக் கூட்டத்தில் சுகயீனம் காரணமாகக்

11

## கட்சி எடுத்த தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவோம்!

### தமிழ் அரசு தலைவர் மாவை 'பல்டி'

யாழ்ப்பாணம், செப். 03

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் கூட்டணியின் சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பதற்கு தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழு எடுத்த தீர்மானத்தை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு தனக்கு உள்ளதாக அந்தக் கட்சியின் தலைவர் மாவை சோ. சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நிகழ்வு ஒன்றின் பின்னர் நேற்று ஊடகங்களுக்கு அவர் கருத்து வெளியிட்டபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

11

## தேர்தல் சட்டத்தை மீறினால் அரச பதவி பறிக்கப்படும்!

கொழும்பு, செப். 03

தேர்தல் சட்டத்தை மீறி அரச ஊழியர்கள் செயல்படுவார்களாயின், அவர்களின் பதவி பறிக்கப்படுமென்று தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் ஆர். எம். ஏ. ஏல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் சட்டத்தை மீறு வோர்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். தேர்தல் பிரசாரங்களில் அரச சொத்துகள்

11

## மருத்துவர்கள் இன்று வேலைநிறுத்தம்

யாழ்ப்பாணம், செப். 03

வடக்கு மாகாணத்திலுள்ள அரச மருத்துவ மனைகளில் இன்று செவ்வாய்க்கிழமை மதியம் 12 மணி முதல் ஒரு மணி வரை ஒரு மணி நேர அடையாள பணிப் பகிஷ்கரிப்பு போராட்டத்தில் மருத்துவர்கள் ஈடுபடவுள்ளனர் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

கடந்த காலத்தில் அரச மருத்துவமனைகளில் ஏற்பட்ட மருந்து பற்றாக்குறைகளை நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்தி தரமற்ற மருந்து கொள்வனவை எதிர்த்து குரல் கொடுத்த அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினரின் தலைவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற

11

## அரச ஊழியர்களின் சம்பளம் 24-50 வீதம் வரை அதிகரிக்கும்

### அனுமதியளித்தது அமைச்சரவை

கொழும்பு, செப். 03

2025 ஜனவரி முதலாம் திகதி முதல் அரச ஊழியர்களின் அடிப்படை சம்பளம் 24 - 50 சதவீதம் வரையில் அதிகரிக்கப்படவுள்ளது.

அரச ஊழியர்களின் சம்பள பிரச்னைக்கு தீர்வு காண்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நியமித்த உதய. ஆர். செனவிரத்ன தலைமையிலான நிபுணத்துவ குழுவின் பரிந்துரைகளை செயல்படுத்த அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

11

### வெளியானது நாமலின் தேர்தல் அறிக்கை:

## தமிழர் பிரச்னை தீர்வு குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை!

- ஒற்றையாட்சி பாதுகாக்கப்படும்
- பௌத்தத்துக்கு முன்னுரிமை

கொழும்பு, செப். 03

தமிழரின் பிரச்னை தொடர்பிலோ அல்லது சிறுபான்மை மக்களுக்கான விசேட வேலைத் திட்டம் தொடர்பிலோ எந்த வாக்குறுதியும் சிறீலங்கா பொது ஜன பெரமுன கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தனது தேர்தல் அறிக்கையில் உள்ளடக்கவில்லை.

நாமல் ராஜபக்ஷவின் தேர்தல் அறிக்கை "நாமல் இலக்கு - உங்களுக்காக முன்னேற்றகரமான நாடு" என்னும் தொனிப்பொருளில் நேற்று திங்கட்கிழமை வெளியிடப்பட்டது.

சர்வமதத் தலைவர்களின் ஆசீர்வாதத்துடன் வெளியீடு செய்யப்பட்ட இந்தத் தேர்தல் அறிக்கையில், அரச முன்னுரிமை, நவீனமயமாக்கம்,

11

## தமிழ் பொது வேட்பாளரின் தேர்தல் அறிக்கை இன்று!

யாழ்ப்பாணம், செப். 03

எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தமிழ்ப் பொது வேட்பாளர் பா. அரயநேத்திரனின் தேர்தல் அறிக்கை இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு வெளியிடப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் நகரில் அமைந்துள்ள பொது வேட்பா ளரின் தேர்தல் பணிமனையில் இந்தத் தேர்தல் அறிக்கை வெளியிடப்படவுள்ளது. இந்த

11

## காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளுக்கு தீர்வு தருவேன்

### கிளிநொச்சியில் சஜித் பிரேமதாஸ

கிளிநொச்சி, செப். 03

நானும் யுத்தத்தால் பாதிக்கப்பட்டவன் என்ற அடிப்படையில் காணாமல் ஆக்கப்பட்டோர் உள்ளிட்ட பாதிக்கப்பட்ட மக்களுக்கு தீர்வு பெற்றுக்கொடுப்பேன் என்று எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

சமத்துவ கட்சியின் கிளிநொச்சியில் அமைந்துள்ள தலைமை பணிமனையில் நேற்று திங்கட்கிழமை நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே


11

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்த்தமாடி அருள்பாலித்தான் நல்லூரான்...!

படங்கள் - ஐ. சிவசாந்தன்









## வடமராட்சி கிழக்கு பிரதேச பண்பாட்டு பெருவிழா இன்று

வடமராட்சி, செப். 03

வடமராட்சி கிழக்கு பிரதேச பண்பாட்டு பெருவிழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு மருதங்கேணி கலாசார மத்திய நிலையத்தில் நடைபெற வுள்ளது.

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகமும் பிரதேச கலாசார பேரவையும் இணைந்து இந்த நிகழ்வை முன்னெடுக்கின்றன.

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் குமாசாமி பிரபாகர மூர்த்தி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட பதில் அரசாங்க அதிபர் ம. பிரதீபன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் அலகின் பிரதி பணிப்பாளர் திருவாட்டி லாகினி நிருபராஜ், வடக்கு மாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்கள ஓய்வுநிலை ஆணையாளர் வல்லிபுரநாதர் பத்மநாதன், கௌரவ விருந்தினர்களாக யாழ். மாவட்ட சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் திருமதி சுகுனாலினி விஜயரத்தினம், மூத்த கலைஞர்களான "கலைச்சாகரம்" செல்லையா பரமானந்தம், அண்ணாவியார் அந்தோனிப்பிள்ளை பிலிப்பையா ஆகியோர் கலந்துகொள்வர்.

இந்த நிகழ்வில் "கலைச்சாகரம்" விருதை மரியாம்பிள்ளை பிரான்சிஸ் (நாட்டுக்கூத்து) பயிலோன் தேவராஜா (நாட்டுக்கூத்து), "கலைமருது" விருதை மு. முரளிதரன் (மரசிற்பம்) மரியாம்பிள்ளை யாகோப்பு செல்வகுமார் (நாட்டுக்கூத்து) "கலைக்கதிர்" இளம் கலைஞர் விருதை ஜெயரத்தினம் ஜெனுசுதன் (சிந்துநடைக்கூத்து) பொன்சென் ரெஜினோல்ட் ராஜ் (நாட்டுக்கூத்து) ஆகியோர் பெறவுள்ளனர். (ஐ-02)

## நல்லூர் ஆலய சூழலில் இன்றைய நிகழ்வுகள்!

யாழ்ப்பாணம், செப். 03

நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழாவை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் சிறப்பு நிகழ்வுகளை ஒழுங்கு செய்து நடத்தி வருகின்றது.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் நடத்தப்படும் இந்த நிகழ்வில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் சிறப்பு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் இரண்டாவது குருமகா சந்நிதானம் சிறீலசிறீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், அமெரிக்கா ஹவாய் சைவ ஆதீன சிவாய சுப்பிரமணிய சுவாமிகளின் சீடர் தொண்டுநாதன் சுவாமிகள் ஆகியோர் திருமுன்னிலை வகிக்க நிகழ்வு ஆரம்பமாகும்.

கொழும்புத்துறை இலந்தைக்குளம் பிள்ளையார் ஆலய பிரதமகுரு சிவசிறீ சங்கர ராஜராஜேஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், யாழ்ப்பாண மாவட்ட செயலக அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் பிரதம அதிதியாகவும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை பொது மருத்துவ நிபுணர் தம்பிப்பிள்ளை பேரானந்தராஜா சிறப்பு அதிதியாகவும் யாழ் உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய ஆசிரியர் ச. நவநீதன் கௌரவ அதிதியாகவும் கலந்து கொள்வர்.

இதில், சிறீலசிறீ ஆறுமுக நாவலர் அறநெறி பாடசாலை, அத்தியடி சிதம்பர நடராஜர் வீரகத்தி பிள்ளையார் அறநெறி பாடசாலை, மாணவர்கள் கலை நிகழ்வுகளை வழங்கவுள்ளனர். விசேட நிகழ்வாக அருள். விக்னேஸ்வரன் வழங்கும் நல்லைக்கந்தன் கானாமிர்தம், யாழ்ப்பாண பல்கலைக்கழக நடனத்துறை போதனாசிரியர் இராசையா தனராஜ் வழங்கும் பரதநாட்டிய நிகழ்வும் நடைபெறவுள்ளன. என்று இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் ய. அநிருத்தனன் தெரிவித்துள்ளார். (ஐ)

## நல்லூரில் யோகக் கலை கற்கைநெறி

யாழ்ப்பாணம், செப். 03

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகினால் உடல், உள மேம்பாட்டுக்காக இலவசமாக நடத்தி வரும் யோகக்கலை அடிப்படை கற்கைநெறியின் புதிய பிரிவு நல்லூர் கந்தன் ஆலய பின்வீதியில் அமைந்துள்ள நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் எதிர்வரும் சனிக்கிழமை காலை 6.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

சனி, ஞாயிறு தினங்களிலும் அரச விடுமுறை தினங்களிலும் காலை 6.00 மணிமுதல் காலை 8.00 மணிவரை நடைபெறும் இந்த வகுப்புகளில் ஆர்வமுள்ள ஆண்கள், பெண்கள் இரு பாலாரும் வயது வேறுபாடின்றி கலந்துகொள்ள முடியும்.

சுமார் மூன்று மாத காலங்களை கொண்டமைந்த இந்த அடிப்படை கற்கைநெறியை பூரணமாக முடிப்பவர்களுக்கு கல்வி அமைச்சால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

பயிலவிரும்புவோர் அன்றைய தினம் நேரடியாக வந்து பதிவுகளை மேற்கொண்டு வகுப்பில் இணைந்து கொள்ளுமாறும் மேலதிக தகவல்களை 021 222 2203 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம் எனவும் கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
03.09.2024 செவ்வாய்க்கிழமை
குரோதி வருடம், ஆவணி 18

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## மக்களை முட்டாளாக்குதல்!

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் தீர்மானத்திலுள்ள குழப்பங்கள் தொடர்பில் நேற்றைய ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிட்டிருந்தோம். தமிழ் அரசுக் கட்சியின் தீர்மானத்துக்கு பின்னாலுள்ள மக்கள் விரோத அரசியல் தொடர்பிலேயே இந்தத் தலையங்கம் கவனம் கொள்கின்றது. இறுதி யுத்தத்தின்போது நிகழ்ந்ததாக நம்பப்படும் மனித உரிமைகள் மீறல் மற்றும் போர்க் குற்றங்கள் தொடர்பில் பொறுப் புக் கூறுமாறு நாம் வலியுறுத்தி வருகின்றோம்.

முள்ளிவாய்க்காலுக்கு பின்னரான தமிழ்த் தேசிய அரசியல் என்பதன் அடிப்படையாக இருப்பது இதுதான். தென்னிலங்கை ஆட்சியாளர்களிடம் பொறுப்புக் கூறுமாறு கேட்கும்போது, சொந்த மக்களுக்கு பொறுப்புச் சொல்ல வேண்டிய கடப்பாடு அவர்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் என்போருக்கு இல்லையா? மக்களின் பெயரால் மேற்கொள்ளப்படும் அரசியல் தீர்மானங்களின் வெற்றிக்கு பொறுப்பு ஏற்றுக்கொள்வதால் பெருமிதம்கொள்ளும் அரசியல் கட்சிகளின் தலைவர்கள், தங்களின் தோல்விகளுக்கு பொறுப்புச் சொல்ல முற்படுவதில்லை.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் நகர்வுகள் தமிழ் மக்களை எந்தளவு முட்டாளாக்க முடியுமோ அந்தளவுக்கு முட்டாளாக்க முயற்சிக்கின்றன. 2015இல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டபோது, அது ஒரு நம்பிக்கை ஒளியை ஏற்படுத்தியிருந்தது. ஏனெனில், அந்த ஆட்சி மாற்றத்தில் தமிழ் மக்களுக்கும் பிரதான பங்கிருந்தது. ஆனால், ஆட்சி மாற்றத்தை எவ்வாறு கையாள வேண்டும்? - எவ்வாறு கையாண்டால் அது அரசியல் தீர்வில் ஒரு படியாவது முன்னோக்கிப் பயணிப்பதற்கான வாய்ப்பை வழங்கும் என்பது தொடர்பில் விவாதிக்கப்பட்டது.

இந்தப் பின்புலத்தில் அரசமைப்பில் இருக்கின்ற அதிகாரங்களை ஓர் ஆரம்பப் புள்ளியாகக் கொண்டு முன்னோக்கிப் பயணிக்க முடியுமென்னும் பரிந்துரை முன்வைக்கப்பட்டது. அன்றைய சூழலில் ஓர் ஆராக்கியமான பார்வையாகவே அது இருந்தது. ஆனால், சம்பந்தன் - சுமந்திரன் தலைமையிலான தமிழ் அரசுக் கட்சி அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. ஒரு புதிய அரசியல் யாப்பைக் கொண்டுவந்து, அதன் மூலம் எழுபது வருடங்களுக்கு மேற்பட்ட தேசிய இனப்பிரச்னையை தீர்த்துவிட முடியுமென்று தமிழ் அரசுக் கட்சி வாதிட்டது. அதன் சாத்தியமின்மையை பலரும் சுட்டிக்காட்டியபோது அதனை தமிழ் அரசுக் கட்சி ஏற்றுக்கொள்ளவில்லை.

இவ்வாறெல்லாம் வாதிட்ட பின்னணியை கொண்டிருக்கும் இலங்கை தமிழ் அரசுக் கட்சி இப்போது என்ன செய்து கொண்டிருக்கின்றது? எவ்வாறான தீர்மானத்தை மேற்கொண்டிருக்கின்றது? சரியான தீர்மானத்தை மேற்கொண்டிருக்கின்றதா? சமஷ்டி அடிப்படையிலான அரசியல் யாப்புக்கான உறுதிமொழியை வழங்கும் தென்னிலங்கை வேட்பாளருக்கு ஆதரவளிக்கவுள்ளதாகக் கூறிய தமிழ் அரசுக் கட்சி தற்போது எந்த வாக்குறுதியின் அடிப்படையில் சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கும் முடிவை எடுத்திருக்கின்றது? மக்களுக்கு கடந்த காலத்தில் வழங்கிய வாக்குறுதிகளுக்கு என்ன நடந்தது? அவற்றுக்கு யார் பொறுப்புக் கூறுவது? மக்கள் முட்டாள்கள் என்பதால் மக்களுக்கு பொறுப்புச் சொல்ல வேண்டியது இல்லையா - இதுதான் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நிலைப்பாடா?

ஒரு புறம் தமிழ்த் தேசியத்தின் பெயரால் கஜேந்திரன்கள் தமிழ் மக்களை முட்டாளாக்க முடியுமென்று எண்ணிச் செயல்படும்போது - மறுபுறம், தமிழ் அரசுக் கட்சியும் ஏட்டிக்குப் போட்டியாக - நாங்களும் சளைத்தவர்கள் அல்லர் என்னும் அடிப்படையில் மக்களை முட்டாளாக்கும் அரசியலை முன்னெடுத்து வருகின்றதா?

மக்களை எல்லாக் காலத்திலும் முட்டாளாக்க முடியுமா என்பதற்கு பதிலளிக்க வேண்டியவர்கள் மக்கள் மட்டும்தான்.



## நல்லூரான் திருவடி - 26

## யோகரின் சிவனுடனான திருவடிக் கலப்பு!

**இன்ஸ்பெக்டர் எஸ். இராசையா**
(சித்தங்கேணி)

இளங்குளிர், காலை வேளை உடம்புக்கு உற்சாகத்தையளித்தது. எனது கால்கள் பழகிப்போன பாதையில் சென்று கொண்டிருந்தன. கொழும்புத்துறை சென்று, யோகரின் குடில் ஆச்சிரமத்துக்கு முன்பாக அமைந்துள்ள மதகுச் சுவரில் ஆறுதலாக அமர்ந்தேன். அப்போது, ஆச்சிரமத்துக்கு உள்ளிருந்து யோகர் கெக்கட்டம் விட்டுச் சிரிப்பதைக் கேட்கமுடிந்தது.

சற்று நேரத்தில் வெளியே வந்த அடியவர் ஒருவர் நேராக என்னை நோக்கி வந்தார். அவர், சுவாமி என்னை அழைத்து வரும்படி கூறியதாகச் சொன்னார். அத்துடன், சி. ஐ. டி. (குற்றப்புலனாய்வு உத்தியோகத்தர்) வந்துள்ளார் எனவும் தெரிவித்தாராம்.

அடியேன் மகிழ்ச்சியோடு ஆச்சிரமத்தினுள் சென்றேன். அங்கே சுவாமியின் திருவடிகளை கட்டி அணைத்தவாறு வீழ்ந்து பக்திப் பரவசத்தோடு வணங்கினேன். அப்போது யோகர், "அடே, போதும் விடடா. வலிக்குதடா. நானும் மனிதனடா, எழும்பு" என்று கூறினார். அதன்பின்னர், சுவாமி நான் வந்த காரணத்தை விசாரித்தார். எனது பதிலைக் கேட்டதும், "நல்லூரும் நல்ல இடம். நல்லூரிலிருந்து விரதம் பிடிக்கலாம்" என்று கூறினார். அடியேன் அந்த ஆண்டு நல்லூரில் கந்தசஷ்டி விரதமனுஷ்டித்தேன்.

இதன்பின்னர் ஒருநாள், சுவாமி கால் வருத்தமாக யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் இருக்கிறார் என்றறிந்ததும், அவரைப் பார்வையிட அங்கே சென்றேன். சுவாமி என்னைப் பார்த்து, "இவ்வேளையில் இங்கே எப்படி வந்தாய்" என்று கேட்டார். அது, பார்வையாளரை அனுமதிக்காத வேளை. அடியேன் அப்போது எனது உத்தியோக பூர்வ அடையாள அட்டையை அவரிடம் காண்பித்தேன். சுவாமி அருகே வருமாறு கூறினார். அடியேன் அப்போது சுவாமிக்கு மிக அருகில் போய் நின்றேன். சுவாமி, "உனக்கு எல்லாம் வெற்றி" என்று என்னிடம் கூறினார்.

ஒருதடவை, உத்தியோக அலுவலாக யாழ்ப்பாண நகரை நோக்கி காங்கேசன் துறை வீதி வழியாக மோட்டார் சைக்கிளில் வந்துகொண்டிருந்தேன். சிவதொண்டன் நிலையம் முன்பாக வேகத்தைக் குறைத்து சற்று எழுந்து நின்று மரியாதை செய்தேன். அச்சமயம் சிவதொண்டன் நிலைய வாசலில் சுவாமி நிற்பதைக் கண்டேன். அப்போது சீருடையில் நான் நின்றதால், அந்த உடையோடு சென்று சுவாமிக்கு சல்யூட் அடித்தேன். அப்போது, நான் செல்லும் கருமத்தைப்பற்றி விசாரித்த பின்னர், சீக்கிரமாகப் போகுமாறு சுவாமி பணித்தார். சுவாமியிடமிருந்து விடைபெறும்போது மீண்டும் அவருக்கு சல்யூட் அடித்தேன்.

இந்த மரியாதையை சுவாமியின் திருவடிக்கலப்பு அதாவது, இறுதிக் கிரியைகளின்போதுகூட சுவாமியின் புனித தேகத்தினருகே சென்று, ஆசைதீரச் செய்தேன். அன்று கடமையின் நிமித்தம் சீருடையிலேயே நின்றிருந்தேன். ஏராளமானவர்கள் சுவாமியின் திருவடிக்கலப்பு நிகழ்வில் பங்குபற்றினர். அச்சமயத்தில் அங்கே அனைத்தையும் நேர்சீராக நடத்தவேண்டிய பொறுப்பிலுமிருந்தேன்.


கொழும்புத்துறை மயானத்தில் சுவாமிகளின் தெய்வீக தேகம் அக்னி பகவானுடன் சங்கமமானது. முழுவதும் மலர்களால் அலங்கரிக்கப்பட்ட பூந்தண்டிகையில் சுவாமியின் திருமேனியை வைத்து, ஏராளமான அடியார்கள் தோளில் காவிச்சென்றனர். கொழும்புத்துறை மயானம்வரை தேவாரங்கள், திருவாசகம் என்பவற்றை பக்தர்கள் பக்திபூர்வமாகப் பாடியபடி வந்தனர். பொது இடங்கள் எதிலுமன்றி, மயானத்திலேயே சந்தனக் கட்டைகள், கற்பூரம் மற்றும் பூசைக்குரிய அனைத்து வாசனைத் திரவியங்களையும் சிதையில் வைத்து, அக்னி பகவானுக்கு ஆகுதியாக - எமக்கு ஒரு நடமாடும் தெய்வமாக இருந்த அம்மகானை சிவனது பாதங்களில் சமர்ப்பித்தோம்.

ஓம் சாந்தி.

இமைப்பொழுதும் எம் நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க!

**தொகுப்பு : அனந்த பாலகிட்ணர்**
(நிறைவு)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்ரெம்பர் - 03 செவ்வாய்க்கிழமை
குரோதி வருடம் - ஆவணி 18
நல்ல நேரம் : 07:31 - 09.00
ராகு காலம் : 03.00 - 04.00
திதி : பிரதமை



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். நட்பு வழியில் நல்ல செய்தி கேட்பீர்கள். உத்தியோகத்தில் திருப்திகரமான சூழ்நிலை உருவாகும். நினைத்தது நிறைவேறும் நாள்.

**இடபம்**
கலைப் பொருட்கள் வாங்குவீர்கள். எதிர்ப்புகளையும் தாண்டி முன்னேறுவீர்கள். சபைகளில் மதிக்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் அமைதி நிலவும். அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

**மிதுனம்**
சொத்து வாங்குவத் விற்பது லாபகரமாக அமையும். புது வாகனம் வாங்குவீர்கள். குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். தைரியமாக சில முடிவுகள் எடுக்கும் நாள்.

**கடகம்**
கணவன் - மனைவிக்குள் இருந்த மோதல்கள் விலகும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். திடீர் லாபம் உண்டு. இழந்த உரிமையை பெறுவீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**சிம்மம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிலரின் விமர்சனங்களுக்கும், வியாபாரத்தில் இழப்புகள் ஏற்படும். உத்தியோகத்தில் அதிகாரிகளால் அலைக்கழிக்கப்படுவீர்கள். திட்டமிட்டு செயல்பட வேண்டும்.

**கன்னி**
சில காரியங்களை அலைந்து திரிந்து முடிக்க வேண்டி வரும். பிள்ளைகளின் உணர்வுகளைப் புரிந்துக் கொள்ளுங்கள். வியாபாரத்தில் ஓரளவு லாபம் வரும். தடைகளை தாண்டி முன்னேறுவீர்.

**துலாம்**
பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வாகனவசதிப் பெருகும். நெருங்கியவர்களுக்காக மற்றவர்களின் உதவியை நாடுவீர்கள். சிந்தனைத் திறன் பெருகும் நாள்.

**விருட்சிகம்**
உங்களின் அணுகுமுறையை மற்றவர்களின் ரசனைக்கு ஏற்ப மாற்றியமைத்துக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் உங்களின் ஆலோசனைகள் ஏற்கப்படும். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**தனுசு**
கணவன் - மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். வியாபாரத்தில் வேலையாட்கள் மதிப்பார்கள். உத்தியோகத்தில் புதிய சலுகைகள் கிடைக்கும். புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

**மகரம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் மனஇறுக்கங்கள் உருவாகும். வியாபாரத்தில் லாபம் மந்தமாக இருக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரி குறை கூறுவார். சகிப்புத் தன்மை தேவைப்படும் நாள்.

**கும்பம்**
விலை உயர்ந்த ஆபரணம் வாங்குவீர்கள். கல்யாண பேச்சு வெற்றியடையும். ஆதாயம் அடைவீர்கள். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து லாபம் ஈட்டுவீர்கள். திறமைகள் வெளிப்படும் நாள்.

**மீனம்**
உறவினர், நண்பர்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள். உத்தியோகத்தில் உங்களை நம்பி மூத்த அதிகாரி சில பொறுப்புகளை ஒப்படைப்பார்.

# பா. ஜ. க. பெரு நிறுவனம் எனில் பழனிச்சாமி நிர்வாக இயக்குநரா?

## பா. ஜ. க. ஒருங்கிணைப்பு குழு தலைவர் ராஜா

சென்னை, செப். 03

பா. ஜ. க. கார்ப்பரேட் நிறுவனம் என்றால் எடப்பாடி பழனிச்சாமி அ. தி. மு. க. என்ற நிறுவனத்தின் நிர்வாக இயக்குநரா? என்று தமிழக பா. ஜ. க. ஒருங்கிணைப்புக் குழு தலைவர் எச். ராஜா கேள்வி எழுப்பியுள்ளார்.

பா. ஜ. க. தேசிய செயல்குழு உறுப்பினர் ராஜா, ஆளுநர் ஆர். என். ரவியை சந்தித்தார். இதன் பின்னர் அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்தவை வருமாறு,

கட்சியில் புதிய பொறுப்பு வழங்கப்பட்டுள்ளதால், ஆளுநர் ஆர். என். ரவியை மரியாதை நிமித்தமாக சந்தித்தேன். அவரிடம் பேசியது தொடர்பாக வெளியில் தெரிவிப்பதற்கு ஒன்றும் இல்லை. கடந்த 5 ஆண்டுக்கு முன்பு, அப்போதையை எதிர்க்கட்சித் தலைவராக இருந்த மு. க. ஸ்டாலினால் ஊழல்வாதி என சான்றிதழ் கொடுக்கப்பட்டவர்தான் செந்தில் பாலாஜி. தற்போது, அவரை ஊழல் தடுப்பு வழக்கில் விசாரிக்க தமிழக அரசுக்கு ஆளுநர் ஒப்புதல் வழங்கியதை வரவேற்கிறோம்.

தி. மு. க. ஆட்சிக்கு வந்தால், செந்தில் பாலாஜி சிறையில் இருப்பார் என்று அன்றே மு. க. ஸ்டாலின் கூறினார். அவர் கூறியது போல, தி. மு. க. ஆட்சிக்கு வந்ததும் செந்தில் பாலாஜி சிறைக்கு சென்றிருக்கிறார்.

பா. ஜ. க. கட்சி கார்ப்பரேட் நிறுவனம்போல செயல்படுவதாக அ. தி. மு. கவினர் கூறுகின்றனர். அப்படி என்றால் பழனிச்சாமி அ. தி. மு. கவின் நிர்வாக இயக்குநரா என நான் கேட்கிறேன். வார்த்தைகள் இருக்கிறது என்பதற்காக அ. தி. மு. கவினர் பேசிக்கொண்டு இருக்கக் கூடாது - என்றார். (எ)

# திருச்சிற்றம்பலம் அம்மன் சிலையை அமெரிக்காவிலிருந்து மீட்க வேண்டும்

## பொன். மாணிக்கவேல் வலியுறுத்தல்

தஞ்சாவூர், செப். 03

அம்மன் சிலையை அமெரிக்காவில் இருந்து மீட்க வேண்டும் என்று சிலை கடத்தல் தடுப்புப் பிரிவு முன்னாள் பொலிஸ் அதிகாரி பொன். மாணிக்கவேல் வலியுறுத்தியுள்ளார்.



தஞ்சாவூர் பேராவூரணி அருகேயுள்ள திருச்சிற்றம்பலத்தில் பழமைவாய்ந்த புராதனவனேஸ்வரர் கோவில் அமைந்துள்ளது. இந்தக் கோவிலில் சிலை கடத்தல் தடுப்புப் பிரிவு முன்னாள் ஐ. ஜி. பொன் மாணிக்கவேல் சுவாமி தரிசனம் செய்தார். தொடர்ந்து, கோவில் வளாகத்தில் கூடியிருந்த கிராம மக்கள் மற்றும் பக்தர்களுடன் பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறியவை வருமாறு, திருச்சிற்றம்பலம் புராதனவனேஸ்வரர் கோவிலுக்குச் சொந்தமான சிவகாமி அம்மன் ஐம்பொன் சிலை 20 ஆண்டுகளுக்கு முன்பு திருடப்பட்டு, மும்பை வழியாக கடத்திச்செல்லப்பட்டது. அந்தச் சிலை தற்போது, அமெரிக்காவின் நியூயோர்க் மாகாணத்தில் உள்ள ஒரு தனியார் அருங்காட்சியகத்தில் காட்சிப் பொருளாக வைக்கப்பட்டுள்ளது.

அந்த அருங்காட்சியகம் சிலையைக் காட்சிப்படுத்தி நாள்தோறும் வருமானம் ஈட்டி வருகிறது. தற்போது அந்த சிலையை ஏலம் விடுவதற்கான நடவடிக்கையை, அருங்காட்சியகம் மேற்கொண்டு வருகிறது. எனவே, 10 கோடி ரூபாய் மதிப்பிலான சிவகாமி அம்மன் ஐம்பொன் சிலையை 3 மாதங்களுக்குள் மீட்டு, இந்தக் கோவிலுக்கு கொண்டுவர இந்து சமய அறநிலையத் துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றார். (எ)

# தமிழகத்தில் போதை பயன்பாடு அதிகரிக்க தி. மு. கவே காரணம்

## அ. தி. மு. க. குற்றச்சாட்டு

சென்னை, செப். 03

தமிழகத்தில் போதைப்பொருள் பயன்பாடு அதிகரித்திருப்பதற்கு தி. மு. க. அரசே காரணம் என்று முன்னாள் அமைச்சர் டி. ஜெயக்குமார் குற்றஞ்சாட்டியுள்ளார். சென்னை திரு. வி. க. நகர் தொகுதி அ. தி. மு. கவினருக்கு புதிய உறுப்பினர் அடையாள அட்டை வழங்கும் நிகழ்ச்சி பெரம்பூரில் நடைபெற்றது.


இதில் பங்கேற்ற பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது, ஓர் அரசு ஏழை மாணவர், மாணவிகளின் விளையாட்டுத் திறனை வெளிக்கொண்டு வரும் வகையில் விளையாட்டுப் போட்டிகளை நடத்துவது வரவேற்கத்தக்கது. அது போன்ற எந்த ஒரு செயலையும் தி. மு. க. அரசு செய்யாமல், கோடீஸ்வரர்கள், பெரும் பணக்காரர்களுக்காக பார்முலா 4 கார் பந்தயம் நடத்தப்படுகிறது.

தி. மு. க. அரசு முதலாளித்துவ அரசு, கார்ப்பரேட் அரசு. ஏற்கனவே இந்த கார் பந்தயத்துக்கு அரசு 48 கோடி ரூபாய் செலவழித்தது, முதல்வர் மு. க. ஸ்டாலின் மற்றும் பா. ஜ. க. தமிழக தலைவர் அண்ணாமலை ஆகியோர் வெளிநாட்டுக்கு சென்றுள்ளனர். அங்கே என்ன நடக்கிறது என்பது ஆண்டவனுக்கு தான் வெளிச்சம்- என்றார். (எ)

# விஜயுடன் கூட்டணி இல்லை தனித்தே நாம் தமிழர் போட்டி

சென்னை, செப். 03

2026இல் தனித்து போட்டியிடுகிறேன். 60 தொகுதிகளுக்கு வேட்பாளர்களை நியமித்து விட்டேன் என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.



சென்னையில் செய்தியாளர்களை சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

2026 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள தமிழக சட்டப்பேரவை தேர்தலில் நடிகர் விஜயின் தமிழக வெற்றிக் கழகத்துடன் கூட்டணி அமைத்து போட்டியிடுவீர்களா என்ற செய்தியாளர்களின் கேள்விக்கு பதிலளித்த சீமான், "2026இல் தனித்து போட்டியிடுகிறேன். இப்போதைக்கு 60 தொகுதிகளுக்கு வேட்பாளர்களை நியமித்துவிட்டேன்"- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 23 வேட்பாளர்கள் மாயம்!

## தொலைபேசி இலக்கங்களும் போலி என்கிறது தேர்தல்கள் ஆணைக்குழு

கொழும்பு, செப். 03

**இலங்கை இம்மாதம் 21 ஆம் திகதி எதிர்கொள்ளவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் வரலாற்றில் முதன் முறையாக 39 வேட்பாளர்கள் போட்டியிடவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்திருந்தது.**

ஜனாதிபதித் தேர்தலில் முன்னிலையாகியுள்ள வேட்பாளர்களுள் 23 பேரின் தற்போதைய நிலை தொடர்பில் எந்தத் தகவலும் இல்லை என தென்னிலங்கை சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பொது மக்களுக்கான கூட்டங்களை நடத்தி தேர்தல் பிரசாரத்தை முன்னெடுப்பது சுமார் 15 வேட்பாளர்கள் மாத்திரமே எனவும் அறியக் கிடைத்துள்ளது.

அதேபோல், குறித்த 23 வேட்பாளர்கள் தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கு வழங்கியுள்ள தொலைபேசி இலக்கங்கள் கூட போலியானவை என தகவல்கள் வெளியாகியுள்ளதாக அந்த பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

எவ்வாறாயினும், தற்போது பிரதான நான்கு கட்சிகளும் தமது தேர்தல் பிரசாரங்களில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றமை தெரியவந்துள்ளது. (அ)

# மனைவியை தாக்கி கொன்ற கணவருக்கு மரண தண்டனை

கொழும்பு, செப். 03

தனது மனைவியை இரும்புக் கம்பியால் தாக்கி கொலை செய்ததாகக் கூறப்படும் கணவருக்கு மரண தண்டனை விதித்து ஊவா மாகாண மேல் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டார்.

35 வயதுடைய மனைவியே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

பதுளை, கெந்தகொல்ல பிரதேசத்தில் கடந்த 2010 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 19 ஆம் திகதி தனது மனைவியை இரும்புக் கம்பியால் தாக்கி கொலை செய்த கணவருக்கு எதிராக பதுளை பொலிஸாரால் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

குடும்ப தகராறு காரணமாக இந்த கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளன.

சந்தேக நபரான கணவருக்கு எதிராக முன்வைக்கப்பட்ட சாட்சிகள் நிரூபிக்கப்பட்டதையடுத்து ஊவா மாகாண மேல் நீதிமன்ற நீதிபதி பிரசன்ன அல்விஸினால் இந்த தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. (அ)

# கல்கிஸை கடலில் மயிரிழையில் உயிர் பிழைத்த மூன்று சிறுவர்கள்!

கொழும்பு, செப். 03

கல்கிஸை கடலில் நீராடிக் கொண்டிருக்கையில் அடித்துச் செல்லப்பட்ட 3 சிறுவர்களை குறித்த இடத்தில் கடமையில் ஈடுபட்டிருந்த கல்கிஸை பொலிஸ் உயிர்காப் புப் பிரிவின் உத்தியோகத்தர்கள் காப்பாற்றியுள்ளனர்.

3 சிறுவர்களும் கடலில் நேற்று முன் தினம் பிற்பகல் நீராடிக்கொண்டிருந்த வேளையில் இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.


உயிர்காக்கும் பணியில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தர்கள் உடனடியாக விரைந்து 3 சிறுவர்களையும் மீட்டு அடிப்படை முதலுதவி அளித்த பின் களுபோவில வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

கொழும்பு 9 இல் வசிக்கும் 16 வயதுடைய 3 சிறுவர்களே இந்த அனர்த்தத்திற்கு முகம் கொடுத்தனர். (அ)

# ஐரோப்பிய ஒன்றிய கண்காணிப்புக் குழுவினர் மதத் தலைவர்களை சந்தித்து கலந்துரையாடல்

கொழும்பு, செப். 03

ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்பு பணிக் குழுவின் தலைமைக் கண்காணிப்பாளர் நாச்சோ சான்செஸ் உள்ளிட்ட அதன் உறுப்பினர்கள் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான கண்காணிப்பு பணிக்காக இலங்கை வந்துள்ளனர்.



இந்நிலையில், பிரதான கண்காணிப்பாளர் நாச்சோ சான்செஸ் உள்ளிட்ட ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்புக் குழுவின் உறுப்பினர்கள் இலங்கையின் தனித்துவமான கலாசாரம் மற்றும் பன்முகத்தன்மை பற்றி இலங்கையில் உள்ள முக்கிய மத தலைவர்களைச் சந்தித்து, கலந்துரையாடி விளக்கங்களை பெற்றுக்கொண்டனர். (அ)

# வவுனியா எரிபொருள் நிலையத்தில் பொலிஸ் முன்னிலையில் தாக்குதல்!

வவுனியா, செப். 03

வவுனியா பண்டாரவன்னியன் சதுக்கப் பகுதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று முன் தினம் நள்ளிரவு 12:15 மணியளவில் எரிபொருள் நிரப்ப வருகை தந்த மூவர் அடங்கிய குழுவினர் அங்கு கடமையில் இருந்தவர்கள் மீது தாக்குதல் நடத்தியதோடு பொலிஸாரோடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

நேற்று முன் தினம் இரவு ஒரு மோட்டார் சைக்கிளில் வருகை தந்த மூவர் எரிபொருள் நிரப்பும் நிலையத்தின் ஊழியரோடு தர்க்கப்பட்ட நிலையில் திடீரென அவர்களில் ஒருவர் அங்கு கடமையில் இருந்த எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர் மீது தாக்குதல் நடத்தினார்.

இதன்போது போக்குவரத்து பொலிஸார் இருவர் சம்பவ இடத்தில் இருந்துள்ளனர்.



தாக்குதல் நடத்தியவர்களை தடுப்பதற்காக எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இருந்த மற்றைய ஊழியர் சென்றபோது அவர் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதனை அடுத்து அங்கு ஒட்டோவில் பொலிஸார் வருகை தந்தபோது தாக்குதல் நடத்திய மூவரும் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

இதனை அடுத்து தாக்குதல் நடத்தியவர்களில் இருவர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர் ஒருவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் நடத்தப்பட்ட போலி வாக்களிப்பு

## எம்பிலிப்பிட்டிய பொலிஸில் முறைப்பாடு

கொழும்பு, செப். 03

எம்பிலிப்பிட்டியவில் பொது இடத்தில் போலியான வாக்களிப்பு நிலையத்தை நடத்தி அதன் பெறுபேறுகளை சமூக ஊடகங்களில் வெளியிட்டமை தொடர்பில் உடனடியாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து ஐக்கிய லங்கா பொதுஜன கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ஜனக ரத்நாயக்க எம்பிலிப்பிட்டிய பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

தேர்தல் சட்டங்களை மீறி தேசிய மக்கள் சக்தி கட்சி உறுப்பினர்கள் குழுவினால் இந்த போலி வாக்களிப்பு நிலையம் நடத்தப்பட்டுள்ளதாக ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இவ்வருடம் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களில் இருந்து சில வேட்பாளர்கள் தெரிவு செய்யப்பட்டு, போலி வாக்குச் சீட்டு தயாரித்து இந்த வாக்கெடுப்பு நடத்தப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

கடந்த ஓகஸ்ட் மாதம் 21ஆம் திகதி அல்லது அதற்கு அண்மித்த நாட்களில் எம்பிலிப்பிட்டிய மாநகர சபைக்கு முன்பாக தெரிவு செய்யப்பட்ட சிலரின் பங்கேற்புடன் இந்த போலி வாக்கெடுப்பு நடத்தப்பட்டதாக ஜனக ரத்நாய்க்க மேலும் கூறினார்.

இது தொடர்பாக தேர்தல் ஆணையத்திடமும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளாக அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# 3 மில்லியன் சிகரெட்டுகள் அழிப்பு

கொழும்பு, செப். 03

இந்த வருடத்தின் முதல் ஆறு மாதங்களில் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் கைப்பற்றப்பட்டு பறிமுதல் செய்யப்பட்ட சுமார் 3 மில்லியன் சிகரெட்டுகளை அழிக்க இலங்கை சுங்கம் திட்டமிட்டுள்ளது.

இலங்கை புகையிலை நிறுவனத்தினால் சுங்கத் திணைக்களத்தின் மேற்பார்வையில் இந்த சிகரெட்டுகள் அழிக்கப்பட உள்ளதுடன் இதன் பெறுமதி 75 மில்லியன் ரூபாவுக்கும் அதிகம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ශ්‍රී ලංකා රේගුව
இலங்கை சுங்கம்
Sri Lanka Customs

கைப்பற்றப்பட்ட சிகரெட்டுகளில் பிரபல வர்த்தகநாமங்கள் உள்ளடங்குவதாகவும், மோசடி செய்ய முயற்சித்த மொத்த வரித் தொகை 480 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமாகும் எனவும் சுங்க அதிகார சபை தெரிவித்துள்ளது. (அ)

# நாட்டில் கர்ப்பவதி தாய்மாருக்கு கருச்சிதைவு அதிகரிக்கும் நிலை

## வைத்திய நிபுணர் ஜி.ஜி.சமல் சஞ்சீவ எச்சரிக்கை

கொழும்பு, செப். 03

இலங்கையிலுள்ள கர்ப்பிணி தாய்மார்களுக்கு கருச்சிதைவு அதிகரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாக வைத்திய நிபுணர் ஜி.ஜி. சமல் சஞ்சீவ எச்சரிக்கை விடுத்துள்ளார்.

குடும்ப சுகாதாரப் பணியகத்தின் சமீபத்திய தரவு அறிக்கைகளில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது, கர்ப்பிணித் தாய்மார்களிடையே இரும்புச்சத்து குறைபாடு மற்றும் நுண்ணூட்டச்சத்து குறைபாடு காரணமாக கர்ப்பிணிப் பெண்களின் கருச்சிதைவு அதிகரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

தற்போது, நாட்டில் பிறக்கும் குழந்தைகளின் எடை குறைவாக இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

கிராம மட்டத்தில் இந்த நிலைமை அதிகளவில் எட்டியுள்ளதாகவும் வைத்தியர் குறிப்பிட்டார்.

எனவே சம்பந்தப்பட்ட விடயங்களை கவனத்தில்கொண்டு தாய் மற்றும் சேய் ஊட்டச் சத்துத் திட்டங்களை கிராம மட்டத்திலிருந்து நடைமுறைப்படுத்த அதிகாரிகள் உழைக்க வேண்டும் எனவும் வைத்தியர் மேலும் தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோட்டா செய்த தவறையே அநுர, சஜித் செய்கிறார்கள்!

## ஜனாதிபதி ரணில் சுட்டிக்காட்டு



கொழும்பு, செப். 03

**முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச செய்த தவறையே மீண்டும் அநுரகுமார மற்றும் சஜித் ஆகியோர் செய்வதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குற்றம் சுமத்தியுள்ளார்.**

தொம்பே பிரதேசத்தில் நடைபெற்ற 'இயலும் சிறீ லங்கா' வெற்றிப் பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இரு வருடங்களுக்கு முன்பு வரிசையில் நின்றதாலேயே இன்று பலர் இங்கு நிற்கிறீர்கள். அன்று இறப்பதற்கும் வரிசையில் நிற்க வேண்டியிருந்தது. பிரதமர் விலகினால் எதிர்கட்சித் தலைவருக்கு இடமளிக்க வேண்டும் என்று சுமந்திரன் எம்.பி கூறினார்.

ஆனால் பிரதமர் பதவியை ஏற்றுக்கொள்ளப் பயமாக இருக்கிறது என்று எதிர்க்கட்சித் தலைவர் சொன்னார். சரத் பொன்சேகாவும் மறுத்தார். அநுரகுமார கேட்கவே இல்லை.

ஆனால் நாட்டின் நிலை மோசமாக உள்ளதை அறிந்தே நான் ஏற்றுக்கொண்டேன்.

இப்போது என்னோடு இருப்பவர்கள் எனக்கு ஆதரவளித்தால் நான் ஏற்றுக்கொண்டேன்.

நாட்டை பொறுப்பேற்க விரும்பாத சஜித்தும் அநுரவும் நான் பதவியேற்பதையும் விரும்பவில்லை.

சஜித்திற்கும் வழங்கும் வாக்குகள் அநுரவுக்கு வழங்கும் வாக்குகளுக்கு சமமானவை என்பதை ஐக்கிய தேசிய கட்சியினர் புரிந்துகொள்ள வேண்டும். அதனால் செப்ரெம்பர் 21 சிலிண்டர் சின்னத்துக்கு வாக்களியுங்கள். இல்லாவிட்டால் சிலிண்டரும் இருக்காது,முதலீட்டு வலயமும் கிடைக்காது-என்றார். (அ)



## சந்திரகுமாரும் சஜித்துக்கு ஆதரவு!

கிளிநொச்சி, செப். 03

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் சமத்துவக் கட்சியின் செயலாளர்நாயகமுமான முருகேசு சந்திரகுமார், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் அமைந்துள்ள சமத்துவக் கட்சி அலுவலகத்துக்கு சென்ற சஜித் பிரேமதாஸவை வரவேற்றபோதே முருகேசு சந்திரகுமார் தனது ஆதரவை தெரிவித்திருந்தார்.

## பொது வேட்பாளருக்கு மல்லாவியில் பிரசாரம்

முல்லைத்தீவு, செப். 04

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தமிழ் பொது வேட்பாளர் பா.அரியநேத்திரனின் தேர்தல் பிரசார கூட்டம் முல்லைத்தீவு - மல்லாவியில் நேற்று முன் பிற்பகல் இடம் பெற்றிருந்தது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், சுரேஷ் பிரேமச்சந்திரன், சிவாஜிலிங்கம் மற்றும் முன்னாள் யாழ் மாநகர சபை மேயர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் உள்ளிட்டவர்கள் உரையாற்றினர்.

பிரசாரக் கூட்டத்தில் முன்னாள் போராளிகள், மல்லாவி வர்த்தக சங்க பிரதிநிதிகள் தாயக செயலணி ஆதரவாளர்கள் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (அ)

# வடக்கு,கிழக்கு மாகாணங்களில் பெரும் அபிவிருத்தித் திட்டங்கள்!

## சஜித் பிரேமதாஸ அறிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 03

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் வாழ்கின்ற வடக்கு கிழக்கு பகுதிகளை மையமாகக் கொண்டு பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படும். இந்த மாகாணத்தில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் வாழ்கின்ற மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துவதற்காக, அவர்களின் வறுமையை போக்குவதற்காக மாதம் ஒன்றுக்கு 20000 வீதம் 24 மாதங்களுக்கு வழங்கி அவர்களை வறுமையில் இருந்து மீட்டெடுப்பதற்கான சக்தியை நாம் கொடுப்போம் என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

சேமிப்பு, முதலீடு, நுகர்வு, உற்பத்தி, மற்றும் ஏற்றுமதி ஆகிய ஐந்து துறைகளை அடிப்படையாகக் கொண்டு, மாதம் 20 ஆயிரம் ரூபா வழங்கி வறுமையை போக்க முடியும். இந்த பிரதேசத்தில் உள்ள இளைஞர்கள் திறமையானவர்கள்.

அர்ப்பணிப்புடன் செயல்பட கூடியவர்கள். வட பகுதிய இளைஞர்களின் சக்தியை முழு நாட்டின் சக்தியாக மாற்ற முடியும். புதிய தொழில் நுட்பங்களின் ஊடாக அவர்களுக்கான திறமைகளை வளர்த்தெடுக்க வழி வகுத்து, இளைஞர்களை வலுவூட்டுவேன் என்றும் அவர் கூறினார்.

தேர்தல் பிரசார நடவடிக்கைகள் நிமித்தம் வட பகுதிக்கு விஜயம் மேற்கொண்டுள்ள எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று முன் தினம் யாழ்ப்பாணத்தில் விவசாயிகளையும் மீனவர்களையும் சந்தித்து கலந்துரையாடியபோதே இவ்வாறு குறிப்பிட்டார்.

பாடசாலை மாணவர்கள், தாய்மார்கள், சிறு பிள்ளைகள் உள்ளிட்ட பாதிக்கப்படக்கூடிய தரப்பினரை இலக்காகக்



கொண்டு இவர்களுடைய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக அரசியல் யாப்பில் பெண்களுக்கான உரிமை, சிறுவர்களுக்கான உரிமை என்பவனவற்றை மேலும் வலுப்படுத்தும் விதமாக விடயங்களை உள்ளடக்குவதாக எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார்.

அத்தோடு, நாட்டின் தேசிய உற்பத்திக்கான பங்களிப்பை பெற்றுக் கொள்கின்ற வகையில் வடகிழக்கு பிரதேசங்களில் புதிய கைத்தொழில் நகரங்களை உருவாக்கி, இளைஞர்களின் பங்களிப்பை பெற்றுக்கொண்டு, தொழில் வாய்ப்பின்மைக்கு தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும். சமாதானத்தின் பிரதிபலன் வடகிழக்கு பகுதிகளுக்கு மட்டுமல்லாமல் எமது நாட்டுக்கும் கிடைக்கப் பெறவில்லை.

அதனால் சமாதான பொருளாதாரத்தின் பிரதிபலனை உருவாக்குவோம். கடன் பொறிக்குள் சிக்கி இருக்கின்ற நாட்டையும் நுண்நிதி கடன்பொறிக்குள் சிக்கி இருக்கின்ற அவர்களையும் மீட்டெடுப்பதோடு, பெண்களை மையமாகக் கொண்ட பெண் தலைமைத்துவ குடும்பங்களை வளப்படுத்துவதற்கு பாரிய நன்கொடையாளர் மாநாட்டை கூட்டுவோம் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

# செப்.15இற்கு முன் 73.5 கோடி டொலர் கடனைச் செலுத்தாவிட்டால் ஆபத்து!

## ஐக்கிய தேசியக் கட்சி சொல்கிறது

கொழும்பு, செப். 03

வெளிநாட்டு வணிகக் கடன் உரிமையாளர்களுக்கு எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் 732 மில்லியன் அமெரிக்க டொலர்களை செலுத்த தவறினால் அவர்கள் வழக்கு தொடுப்பதாகத் தெரிவித்திருக்கின்றனர். அவ்வாறான நிலை ஏற்பட்டால் நாடு வங்குரோத்தடைவதை தவிர்க்க முடியாமல் போகும் என ஐக்கிய தேசிய கட்சியின் கொழும்பு மாவட்ட அமைப்பாளர் நிஷாந்த சிறீ வர்ணசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று முன் தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஏற்கனவே இலங்கை அரசாங்கம் கடன் செலுத்தத் தவறி இருப்பதாகத் தெரிவித்து வழக்கு தொடுக்கப்பட்டிருந்தபோது, அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் செய்துள்ள ஒப்பந்தத்தில் அந்த விடயங்கள் உள்வாங்கப்பட்டுள்ளதால், நாணய நிதியம், அது தொடர்பாக அமெரிக்க ரிசேர்வ் வங்கிக்கு தெளிவுபடுத்தியதால் குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்வதை பிற்போட்டுள்ளது.

அடுத்த வருடத்துக்கான வரவு-செலவுத் திட்டம் சர்வதேச நாணய நிதியத்தின் கடன் உதவியுடனே தயாரிக்கப்பட விருக்கிறது. தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெற்றிபெற்றால், நாணய நிதியத்தின் ஒப்பந்தத்தை அவ்வாறே முன்னெடுத்து செல்வதாக தெரிவித்திருக்கிறார்.

ஆனால், சஜித், அநுர யாராவது வெற்றிபெற்றால், அவர்கள் நாணய நிதியத்தின் ஒப்பந்தத்தை திருத்துவதாக தெரிவித்திருக்கின்றனர். நாணய நிதியம் இவர்களின் நிபந்தனையை ஏற்றுக் கொள்ள முடியாது எனத் தெரிவித்து, ஒதுங்கிக்கொண்டால், என்ன செய்வது? நாடு பெரும் பொருளாதார நெருக்கடிக்கு முகம்கொடுக்க வேண்டி ஏற்படும்.

அத்துடன், ஜனாதிபதி வேட்பாளர்கள் தற்போது வெளியிட்டுள்ள தங்களின் கொள்கை பிரகடனங்களில், ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கை பிரகடனத்திலேயே நாட்டை கட்டியெழுப்பி, பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கான வேலைத்திட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஏனைய வேட்பாளர்களின் கொள்கை பிரகடனங்களில் நாட்டின் உண்மையான பிரச்னைக்கு தீர்வு இல்லை. வெறும் வாக்குறுதிகளையே அவர்கள் அளித்து வருகின்றனர். சஜித் பிரேமதாஸவும் அநுரகுமார திஸாநாயக்கவும் போட்டிக்கு வாக்குறுதிகளை அளித்து வருகின்றனர்.

வங்குரோத்து அடைந்த ஒரு நாடு இரண்டு வருடங்களில் உலகில் எந்த நாடும் இயல்பு நிலைக்கு வந்ததில்லை. ஆனால், ரணில் விக்கிரமசிங்க இரண்டு வருடங்களில் நாட்டை இயல்பு நிலைக்கு கொண்டுவந்துள்ளதையிட்டு உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி என்பன ஆச்சரியமடைந்துள்ளன. ரணில் விக்கிரமசிங்கவின் திறமையும் அனுபவமுமே இதற்கு காரணமாகும்- என்றார். (ஐ)

# நாட்டு மக்கள் உணரக்கூடிய மாற்றத்தை ஏற்படுத்துவோம்

## ஐக்கிய மக்கள் சக்தி கூறுகிறது

கொழும்பு, செப். 03

ஊழலையும் மோசடியையும் ஒழிப்பதன் ஊடாகவே நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல முடியுமென, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஐக்கிய மக்கள் சக்தியிடமே, தூர நோக்குடைய தேசிய ரீதியிலான சிந்தனை உண்டு. அதன் காரணமாகவே, நடைமுறைக்கு சாத்தியமான தேர்தல் விஞ்ஞாபனத்தை நாம் வெளியிட்டுள்ளோம்.

ஊழலையும், மோசடியையும் முற்றாக ஒழிக்க வேண்டும். அதனூடாகவே நாட்டை முன்னேற்ற பாதையில் இட்டுச்செல்ல முடியும். இந்த விடயத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மிக இறுக்கமான நிலைப்பாட்டை கொண்டிருக்கின்றார்.

பொருளாதார ரீதியாக நாட்டை வழிநடத்தக்கூடிய குழு ஐக்கிய மக்கள் சக்தியிலேயே இருக்கின்றது. நாம் நாட்டை பொறுப்பேற்று மிகக்குறுகிய காலத்தில், மக்கள் உணரக்கூடிய மாற்றத்தை ஏற்படுத்துவோம்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலவசக் கல்விக்காகக் குரல் கொடுக்கும் அரசியல் தலைவர்களின் பிள்ளைகள் தனியார் பல்கலையில்!

## சம்பிக்க ரணவக்க சுட்டிக்காட்டு

கொழும்பு. செப். 03

**நாட்டில் உள்ள அப்பாவி மக்களின் பிள்ளைகள் இலவசமாக உயர்கல்வி பெறும் அரச பல்கலைக் கழகங்களுக்குள் பாலியல் வன்முறைகளை கொண்டு வந்து பெற்றோர்களையும் பிள்ளைகளையும் பயமுறுத்துவதாக ஜே.வி.பியினர் மீது பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க குற்றம் சுமத்தியுள்ளார்.**



எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு நடைபெற்ற கண்டி மாவட்ட மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே சம்பிக்க ரணவக்க இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ரணில் விக்கிரமசிங்க இதுவரை உருவாக்கிய பொருளாதாரம் வெறும் கண்மூடித்தனமானது.

ஒவ்வொரு பொருளுக்கும் வரி விதிக்கப்பட்டு மக்கள் வரிச்சுமையால் நசுக்கப்படும் பொருளாதாரம் இது.

ஆனால், ரணில் விக்கிரமசிங்க வரி ஏய்ப்பு செய்பவர்களின் குலத்தைத் தொட்டதில்லை. ரணில் மீண்டும் வருவார் என்றால் இன்னும் 5 வருடங்கள் இதே போல் தான் கஷ்டப்படுவார்.

ரணில் விக்கிரமசிங்க இம்முறை தோற்கப்போவது தெரியும்.

எனவே சஜித் பிரேமதாசவை தோற்கடித்து பழிவாங்க வேண்டும் என்பதே அவரது ஒரே நம்பிக்கை.

புதியவர் துன்புறுத்தல் எனப்படும் பாலியல் துன்புறுத்தலில் தொடங்கி பல்கலைக்கழகங்களுக்கு கிடைமட்ட துன்புறுத்தல் செயல்முறையை கொண்டு வந்தது யார்?

அனுர குமார திஸாநாயக்கவின் அரசியல் லால்காந்தவின் அரசியலாகும்.

இன்று, மூன்று வருட பட்டப் படிப்பை முடிக்க ஐந்து அல்லது ஆறு ஆண்டுகள் ஆகும்.

என்ன நடந்தது? தனியார் பல்கலைக்கழகங்களின் பெரிய வலையமைப்பு உருவானது. ஏனெனில் அவர்களால் மாணவர்களை அரச பல்கலைக்கழகத்திற்கு அனுப்ப முடியவில்லை.

நாட்டில் இந்த தனியார் பல்கலைக்கழக அலையை உருவாக்கியது யார்? அனுர திஸாநாயக்க, மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் குழு, பல்கலைக் கழகங்கள் எப்போது திறக்கப்படும்? அது எப்போது மூடப்படும்? பள்ளிகள் எப்போது திறக்கப்படும்? அது எப்போது மூடப்படும்? என்று முடிவு செய்தனர்.

மாணவர்களுக்கு கிடைத்த ஒரே விஷயம் கண்ணீர்ப்புகை. ஏனென்றால், நாம் அதனால் பாதிக்கப்பட்ட தலைமுறை.

நான் சொல்கிறேன், முடிந்தால் ஜனதா விமுக்தி பெரமுனவின் அரசியல் வாரியம், தங்கள் பிள்ளைகள் சென்ற பல்கலைக் கழகங்களை, அரசப் பல்கலைக் கழகத்தை காட்ட வேண்டும்.

இவர்களில் சிலரின் பிள்ளைகள் நேரடியாக தனியார் பல்கலைக்கழகங்களில் அனுமதிக்கப்பட்டனர். முடிந்தால், என் குழந்தைகள் இங்கே இருக்கிறார்கள், என் குழந்தைகள் இருவரும் அரசாங்கப் பள்ளிக்குச் சென்றனர்- என்றார்.

(அ)

# தமிழ் எம்.பிக்கள் அனைவருமே ஒன்றித்து செயல்படவேண்டும்!

## இராதாகிருஷ்ணன் அழைப்பு

கொழும்பு, செப். 03

வடக்கு,கிழக்கு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும், மலையக தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் இணைந்து செயற்பட வேண்டும் என அழைப்பு விடுத்துள்ளார் மலையக மக்கள் முன்னணியின் தலைவர் வீ.இராதாகிருஷ்ணன்.

இவ்வாறு தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து செயற்பட்டால் பல்வேறு பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு வழி பிறக்கும் எனவும் அவர் கூறினார்.

“வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ்க் கட்சிகள் பிரிவடைந்துள்ளன. மலையகத்திலும் இந் நிலைமை காணப்படுகின்றது. இது ஏற்புடைய விடயமல்ல. எனவே, முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களையும் இணைந்துக்கொண்டு தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பனர்களாக நாம் இணைந்து பயணிக்க வேண்டும். அதன்மூலம் அரசுக்கு அழுத்தங்களை பிரயோகிக்க முடியும்.” - எனவும் இராதாகிருஷ்ணன் எம்.பி. குறிப்பிட்டார்.

(அ)

# தமிழ் மக்கள் ஒருமித்த குரலாக திரண்டு வாக்களிக்கவேண்டும்

## ஜனநாயக போராளிகள் அழைப்பு

யாழ்ப்பாணம், செப். 03

தமிழ் மக்கள் ஒருமித்த குரலாக ஒன்றுதிரண்டு சங்கு சின்னத்திற்கு வாக்களிக்கவேண்டும் என ஜனநாயக போராளிகள் கட்சி தலைவர் வேந்தன் தெரிவித்துள்ளார்.

வடமராட்சி கிழக்கு மணல்காடு பகுதியில் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தல் பரப்புரையின்போது ஊடகங்களுக்கு இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

தமிழ் தேசிய பொதுக் கட்டமைப்பின் ஏற்பாட்டில் பா.அரியநேத்திரனுக்கு ஆதரவு தெரிவித்து பரப்புரை முன்னெடுக்கப்பட்டது.

இதில் ஜனநாயக போராளிகள் கட்சி தலைவர் வேந்தன், ஜனநாயக போராளிகள் கட்சி நிர்வாகிகள், உறுப்பினர்கள், பருத்தித்துறை பிரதேச சபை முன்னாள் உறுப்பினர்கள், மணல்காடு, கிராம அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டனர். (அ)

# வடக்கு அபிவிருத்திக்கு ஜனாதிபதி செயலணி!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு

கிளிநொச்சி, செப். 03

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களின் வாழ்வாதாரம், அபிவிருத்தி, மற்றும் பிரதேச பொருளாதாரத்தை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். வட பிரதேசத்திற்காக தனியான ஜனாதிபதி செயலணி ஒன்றும் நிறுவப்படும். ஏனைய பிரதேசங்களுக்கும் மாகாண அடிப்படையில் செயலணிகள் அமைக்கப்படும். இந்த வேலை திட்டத்தின் ஊடாக யாழ் தேர்தல் மாவட்டத்தில், யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி நிர்வாக மாவட்டங்களுக்கு இரண்டு உப செயலணிகளும் அமைக்கப்பட்டு, மாதாந்த வடக்கின் அபிவிருத்தி தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வேன் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச மற்றும் சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளர் மு.சந்திரகுமார் ஆகியோர் இடையே நேற்று சமத்துவக் கட்சியின் கிளிநொச்சி தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற விசேட சந்திப்பின் போது கருத்துத் தெரிவிக்கையிலயே எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

பெண்களை தலைமையாகக் கொண்ட அதிக குடும்பங்கள் காணப்படுவதோடு, அவர்கள் நுண் நிதி கடன் பொறிக்குள் சிக்கி இருக்கின்றார்கள். காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் இதுவரை எந்த தீர்வும் இல்லை. யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட அதிகமான குடும்பங்கள் காணப்படுகின்றன. தானும் இந்த யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட ஒரு குடும்ப உறுப்பினர் என்ற அடிப்படையில், யுத்தத்துக்கு பின்னரான இந்தப் பிரதேசங்களின் அபிவிருத்தி தொடர்பில் கவனம் செலுத்துவேன். இளைஞர் யுதிகளின் பிரச்னைகள் உட்பட தொழில் இல்லா பிரச்னைக்கும் தீர்வினை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுப்பேன் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இதன் போது தெரிவித்தார்.

வடகிழக்கு மக்களை பாதுகாக்கும் வகையிலான முற்போக்கான பல வேலைத் திட்டங்களை முன்னெடுப்போம். ஒரே நாட்டுக்குள் அதிகாரப் பகிர்வை மேற்கொண்டு, 13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை அடிப்படையாகக் கொண்டு செயற்பாடுகளை முன்னெடுப்பதோடு, மாகாண சபைகளுக்கு காணப்படுகின்ற அதிகாரங்களை மத்திய அரசாங்கம் பறித்துக் கொள்கின்ற செயற்பாட்டிற்கு இடமளிக்காது, குறுகிய காலத்திற்குள் மாகாண சபை தேர்தலை நடத்தைவோம் என்றும் எதிர்க் கட்சித் தலைவர் தெரிவித்தார்.

(அ)

# அநுரகுமார வெற்றி பெற்றால் வேறு கட்சியிலிருந்தே பிரதமர்!

## விஜயதாஸ ராஜபக்ஷ கூறுகிறார்

கொழும்பு, செப். 03

அனுரகுமார வெற்றிபெற்றால் பாராளுமன்றத்தை கலைத்து காபந்து அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு அவர்களுக்கு பாராளுமன்றத்தில் ஆசனங்கள் இல்லை. அதனால் ஜே.வி.பி. அரசாங்கம் அமைப்பது சாத்தியமில்லை. அதேநேரம் அவருக்கு எதிராக குற்றப்பிரேரணை ஒன்று கொண்டுவந்தால், அது தொடர்பான விசாரணை முடிவடையும் வரைக்கும் பராளுமன்றத்தை கலைக்கவும் முடி யாது என ஜனாதிபதி வேட்பாளர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

எதிர்வரும் 21ஆம் திகதி இடம்பெற இருக்கும் ஜனாதிபதி தேர்தலில் அனுரகுமார திஸாநாயக்க வெற்றி பெற்றால் அவர் எவ்வாறு தற்காலிக அரசாங்கம் அமைப்பது என்ற கேள்விக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் யாராவது ஒரு வேட்பாளர் எதிர்வரும் 21ஆம் திகதி வெற்றி பெற்றால், அவர் ஜனாதிபதியாக பொறுப்பேற்றதன் பின்னர் பாராளுமன்றத்தை கலைக்கும் அதிகாரம் அவருக்கு கிடைக்கிறது. அவ்வாறு அவர் பாராளுமன்றத்தை கலைத்தால் தற்காலிக அமைச்சரவை ஒன்றை அவர் அமைக்கவேண்டும். அவ்வாறு இல்லாமல் அடுத்த வருடம் செப்ரெம்பர் முதலாம் திகதிவரை பாராளுமன்றத்துக்கான காலம் இருப்பதால், அதுவரைக்கும் பாராளுமன்றத்தை அவ்வாறே கொண்டுசெல்லவும் தெரிவு செய்யப்படும் ஜனாதிபதிக்கு முடியும்.

அதேநேரம் பாராளுமன்றத்தில் இருக்கும் உறுப்பினர்களில் அதிகமானவர்களின் விருப்பத்துக்குரியவர் என ஜனாதிபதி நினைக்கும் ஒருவரை பிரதமராக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இருக்கிறது. ஏனெனில் அடுத்த பாராளுமன்றம் வரைக்கும் நாட்டில் அமைச்சரை ஒன்று இருக்கவேண்டும்.

குறைந்தது 20 அமைச்சர்களாவது இருக்கவேண்டும். அப்போதுதான் நாட்டை கொண்டு செல்ல முடியும். அனுரகுமார வெற்றிபெற்றால், அவர்களுக்கு பாராளுமன்றத்தில் போதுமான உறுப்பினர்கள் இல்லை. அதனால் வேறு கட்சிகளில் இருந்தாவது பிரதமர் ஒருவரை ஜனாதிபதிக்கு நியமிக்க வேண்டி ஏற்படுகிறது.

மேலும் இந்த தேர்தலில் அனுரகுமார திஸாநாயக்க வெற்றி பெற்றால் ஏதாவது ஒரு காரணத்துக்காக அவருக்கு எதிராக குற்றப்பிரேரணை ஒன்றை பாராளுமன்றத்துக்கு கொண்டு வந்து, அவரை பதவி நீக்கவும் முடியும். பாராளுமன்ற உறுப்பினர்கள் கைச்சாத்திட்டு சபாநாயகருக்கு குற்றப்பிரேணை கையளிக்கப்பட்டு, அதனை சபாநாயகர் ஏற்றுக்கொண்டால், அதன் பின்னர் குற்றப்பிரேரணை தொடர்பான வழக்கு விசாரணைகள் முடிவடைந்து தீர்ப்பு கிடைக்கும் வரை பாராளுமன்றத்தை கலைக்க முடியாது-என்றார்.

(அ)

# அறகலய போராட்டத்தின்போது தன்னை காப்பாற்றுமாறு கதறினார் நாமல் எம்.பி.!

கொழும்பு, செப். 03

அறகலய போராட்டம் இடம்பெற்ற போது தம்மைக் காப்பாற்றுமாறு நாமல் கதறி அழுதார் என அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

போராட்டம் நடைபெற்ற போது அலரி மாளிகையை போராட்டக்காரர்கள் முற்றுகையிட்டபோது, என்னைக் காப்பாற்றுங்கள் என தொலைபேசி ஊடாக நாமல் அழுது புலம்பினார் என அவர் கூறினார்.

இராணுவத் தளபதிக்கும் அவர் தொலைபேசி அழைப்பு ஏற்படுத்தியிருந்தார். அன்றைய நிலைமைகளை மறந்து இன்று நாமல் ராஜபக்ஷ மார்தட்டிக் கொள்வதாக நிமால் சிறிபால டி சில்வா குறிப்பிட்டார்.

நெருக்கடியான தருணத்தில் தம்மை மீட்ட ஜனாதிபதிக்கு நன்றி பாராட்ட மக்கள் அணி திரண்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார் மருத்துவமனை மருந்துகளால் ஆபத்து!

**சம்மாந்துறை, செப். 03**

**தனியார் மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்களில் வழங்கப்படும் மருந்துகளால் மக்களுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது என்ற அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.**



அம்பாறை, சம்மாந்துறை - இறக்காமம் பிரதேசத்திலுள்ள தனியார் மருத்துவமனை மற்றும் மருந்தகங்களில் மருத்துவரின் ஆலோசனையின்றி பயிற்றுவிக்கப்படாத மருந்து கலவையாளர்களால் மருந்துகள் வழங்கப்பட்டு வருவதாகவும், அவ்வாறு வழங்கப்பட்ட மருந்துகளால் சில நோயாளிகள் பாதிப்புக்குள்ளா கியுள்ளதாகவும் பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று இறக்காமம் சுகாதார வைத்திய அதிகாரி எம். ஐ. இஸ்மாயில் தெரிவித்தார்.

பொது மக்களால் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைவாக திடீர் பரிசோதனையொன்றை மேற்கொண்டோம். அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் பொதுமக்களால் முறையிடப்பட்ட பிரச்னைகள் அவதானிக்கப்பட்டன.

இதனையடுத்து, இறக்காமம் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட அனைத்து தனியார் மருத்துவமனைகள் மற்றும் மருந்தக உரிமையாளர்கள் அனைவரும் அழைக்கப்பட்டு தனியார் மருத்துவமனைகள் எவ்வாறு அமைந்திருக்க வேண்டும் என்பது பற்றியும் ஏராளமான தனியார் மருத்துவமனைகளில் பயிற்றுவிக்கப்படாத நபர்களால் மருந்துகள் விநியோகிப்பதும் மற்றும் இரத்தப் பரிசோதனைக்கான மாதிரிகள் சேகரிக்கப்படுவதும் மிகவும் பொருத்தமற்றவை என்றும் அவர் சுட்டிக்காட்டியதோடு, அவற்றில் ஏற்படுகின்ற பாதகங்கள் தொடர்பாகவும் தெளிபடுத்தி இவ்வாறான செயல்பாடுகளை இனிமேலும் செய்யக்கூடாது என்று சுகாதார வைத்திய அதிகாரிகளால் எச்சரிக்கப்பட்டது.

இது தொடர்பான கலந்துரையாடலும், அறிவுறுத்தல்களும் இறக்காமம் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தில் நடைபெற்றது.

(எ)





# இராமகிருஷ்ணா அரங்கு அக்கரைப்பற்றில் திறப்பு

*திருக்கோவில், செப். 03*

திருக்கோவில் வலயத்திலுள்ள அக்கரைப்பற்று சிறீ இராமகிருஷ்ணா தேசிய கல்லூரியில் 1983ஆம் ஆண்டில் க. பொ. த. சாதாரண தரத்தில் கற்ற மாணவர்களின் அமைப்பான, கல்வி மற்றும் சமூக அபிவிருத்தி சங்கத்தினரால் அக்கரைப்பற்று சிறீ இராமகிருஷ்ணா தேசிய கல்லூரியில் “சிறீ இராமகிருஷ்ணா அரங்கு” திங்கட்கிழமை காலை திறந்து வைக்கப்பட்டது.

கல்லூரி அதிபர் க. ஜயந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் குறித்த சங்கத்தின் தலைவர், உறுப்பினர்கள் கலந்துகொண்டு அரங்கத்தை திறந்து வைத்தனர்.

குறித்த அமைப்பின் தலைவர் சுந்தரம் சிவபாலன், செயலாளர் சிவலிங்கம் கனகரெட்ணம், பொருளாளர் சின்னத்தம்பி மணிமாறன் மற்றும் உறுப்பினர்களுக்கு பாடசாலை சார்பில் நன்றி கூறும் நினைவுச்சின்னங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் ஆசிரியர்களும் மாணவர்களும் கலந்து கொண்டனர்.

(எ)



# நற்பிட்டிமுனை விஷ்ணு ஆலய இராஜகோபுரத்துக்கு அடிக்கல்

*கல்முனை, செப். 02*

கல்முனை நற்பிட்டிமுனை சிறீ மகா விஷ்ணு ஆலய இராஜ கோபுர அடிக்கல் நாட்டு விழா சனிக்கிழமை நடைபெற்றது.

ஆலய பிரதம குரு சிவசிறீ கஜன் குருக்கள் தலைமையில் கிரிஜைகள் நடைபெற்று விருந்தினர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது.

(எ)

# சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

*மட்டக்களப்பு, செப். 03*

எபெக்ஸ் கம்பஸ் மொழி மற்றும் தொழில் பயிற்சி நிலையத்தின் அனுசரணையுடன் கைத்தொழில் அபிவிருத்தி சபையின் மட்டக்களப்பு மாவட்ட காரியாலயத்துடன் இணைந்து தொழிற்கல்வி கற்கைநெறிகளை பூர்த்தி செய்த கிழக்கு மாகாணத்தை சேர்ந்த 250 பயிலுநர்களை கௌரவித்து அவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு மட்டக்களப்பு தேவநாயகம் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபை தவிசாளர் கலாநிதி சாரங்க அழகப்பெரும பிரதம விருந்தினராக கலந்து கொண்டு மாணவர்களுக்கான சான்றிதழ்களை வழங்கினார்.

தேசிய ரீதியாக சாதனை படைத்த தொழில் வல்லுநர்கள், ஆசிரியர்கள், விருந்தோம்பல் மற்றும் சுற்றுலாத்துறை, பேக்கரி முகாமைத்துவம் போன்ற பாடப் பிரிவுகளில் பயிற்சி பெற்றவர்களுக்கே இந்தச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. மேலும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 200இற்கும் மேற்பட்ட இளைஞர், யுவதிகளை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட “கிழக்கு மாகாண சுற்றுலா மையம்” செயல்திட்டத்தில் உள்ள 20 தொழில் முயற்சியாளர்கள் முதற் கட்டமாக தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

# தங்கங்களின் கிரிக்கெட் சமர் சம்பியனானது சிவானந்தா

*திருகோணமலை, செப். 03*

மட்டக்களப்பு - திருகோணமலை தங்கங்களின் 29ஆவது வருடாந்த கிரிக்கெட் சமரில் மட்டக்களப்பு சிவானந்தா சம்பியனானது.

திருகோணமலை ஆர். கே. எம். சிறீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி 29ஆவது தடவையாக ஒழுங்கு செய்திருந்த திருகோணமலை ஆர். கே. எம். சிறீ கோணேஸ்வரா இந்து கல்லூரிக்கும், மட்டக்களப்பு கல்லடி சிவானந்தா தேசிய கல்லூரிக்கும் இடையிலான 50 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் சமர், திருகோணமலை ஆர். கே. எம். சிறீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய திருகோணமலை அணி 32. 5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 72 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மட்டக்களப்பு அணி 13. 4 ஓவர்களில் 2 விக்கெட்களை இழந்து 76 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது.





திருகோணமலை இந்து கல்லூரி அதிபர் எஸ். கணேசலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த போட்டியில் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் கே. சிவகுமார் பிரதம விருந்தினராகவும், திருகோணமலை கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் என். பரமேஸ்வரன் கௌரவ விருந்தினராகவும், சிறுவர் கல்வி உதவிகள் அமைப்பின் சர்வதேச இணைப்பாளர் எஸ். கங்காதரன் மற்றும் கனடா சி. இ. டி. கிங் குறூப் பணிப்பாளர் பெஞ்சமின் லோரன்சுப்பிள்ளை, மட்டக்களப்பு சிவானந்தா கல்லூரி அதிபர் எஸ். தயாபரன் ஆகியோர் விசேட விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

சிறந்த துடுப்பாட்ட வீரராக மட்டக்களப்பு அணியைச் சேர்ந்த துவாதரன் தெரிவு செய்யப்பட்டதுடன், சிறந்த பந்து வீச்சாளராகவும், சிறப்பாட்டக்காரராகவும் மட்டக்களப்பு சிவானந்தா அணித்தலைவர் நிரூபன் தெரிவு செய்யப்பட்டார்.



(எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# வெல்க தமிழ்

## சங்கு எங்கள் சின்னம்

எமது அரசியல் அபிலாஷைகள்
ஒரே குரலாய் ஓங்கி ஒலித்திட
**கட்சிகளைக் கடந்து**
தமிழ் இனமாகச் சிந்திப்போம்!

எங்களிடம்
இருக்கும்
ஜனநாயக ஆயுதம்
**வாக்குகள்தான்.**
இம்முறையாவது
இலக்குத் தவறாது
பிரயோகிப்போம்.



## தமிழ்ப் பொது வேட்பாளர்

# பா.அரியநேத்திரன்

தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனிவாவிலிருந்து வரும் அச்சுறுத்தலை எவ்வாறு எதிர்கொள்ளப்போகின்றீர்கள்?

## ஜனாதிபதி வேட்பாளர்கள் தெளிவுபடுத்த வேண்டுமென்கிறார் ஜெனரல் ஜகத் டயஸ்

கொழும்பு, செப். 03

**ஜெனிவாவின் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் மூலம் ஏற்படக்கூடிய அச்சுறுத்தல்களை எவ்வாறு எதிர்கொள்ளப்போகின்றார்கள் என்பதை ஜனாதிபதி வேட்பாளர்கள் தெளிவுபடுத்த வேண்டும் என முன்னாள் இராணுவ அதிகாரி ஜெனரல் ஜகத் டயஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

ஆதாரமற்ற யுத்தக் குற்றச்சாட்டுகளை அடிப்படையாக வைத்து யுத்தத்தில் வெற்றி பெற்ற இராணுவத்தினரை இலங்கை அரசாங்கம் தண்டிக்க வேண்டும் என அழுத்தம் கொடுக்கும் மனித உரிமை பேரவையை எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றார்கள் என்பது குறித்து ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தமது நிலைப்பாடுகளை முன்வைக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஜெனிவாவின் சமீபத்தைய அறிக்கையை சுட்டிக்காட்டியுள்ள ஜகத் டயஸ், இந்த கடும் சவாலை எதிர்கொள்வதில் அரசாங்கத்துக்கும் ஜனாதிபதி வேட்பாளர்களுக்கும் உள்ள பொறுப்பை வலியுறுத்தினார்.

யுத்தகுற்றங்களில் ஈடுபட்டவர்கள் என தான் குற்றம் சாட்டியவர்களை விசாரணைகளுக்கு உட்படுத்தி தண்டிப்பதற்கு இலங்கை தவறிவிட்டதாக குற்றம்சாட்டும் ஜெனிவா, வெளிப்புற உலகளாவிய நியாயாதிக்கத்தை பயன்படுத்துதல், நம்பகத்தன்மை மிக்க விதத்தில் குற்றம்சாட்டப்பட்ட வர்களுக்கு எதிராக பொருளாதார தடைகள், பயணத் தடைகளை விதித்தல்,சர்வதேச சட்டத்தின் அடிப்படையில் பிற நடவடிக்கைகள் போன்ற தந்திரோபாயங்களை சர்வதேச சமூகம் பின்பற்றவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளது என ஜகத் டயஸ் தெரிவித்தார். (அ)

# நெல் உற்பத்தியில் வீழ்ச்சி

கொழும்பு, செப். 03

கடந்த பெரும்போக பருவத்தில் நெல் உற்பத்தி 2.63 மில்லியன் மெட்ரிக் டன்களாக பதிவாகியுள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது. இது கடந்த காலத்துடன் ஒப்பிடுகையில் 2.4 சதவீதம் வீழ்ச்சியாகும். அத்துடன், கடந்த மே மாதத்தில் மீன் உற்பத்தியும் 5.3 சதவீதம் குறைவடைந்துள்ளது. சீரற்ற வானிலை காரணமாக மீன்பிடி நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்பட்டுள்ளது.

இதே காலப்பகுதியில், கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், உள்ளூர் சீனி உற்பத்தியும் 33.8 வீதத்தாலும், தேங்காய் உற்பத்தி 0.5 வீதத்தாலும் குறைந்துள்ளதாக மத்திய வங்கி அறிவித்துள்ளது. (அ)

# துப்பாக்கித் தோட்டாவுடன் விமானப்படை பெண் கைது!

கொழும்பு, செப். 03

கட்டுநாயக்க விமான நிலையத்தில் ரீ-56 ரக துப்பாக்கிக்குப் பயன்படுத்தப்படும் தோட்டாவுடன் விமானப்படை பெண் சிப்பாய் ஒருவர் கைதாகியுள்ளார்.

நாட்டிலிருந்து டுபாய்க்குச் செல்ல முற்பட்டபோது விமான நிலைய பாதுகாப்பு அதிகாரிகளால் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதானவர், குருநாகல் பகுதியைச் சேர்ந்த 37 வயதுடைய ஓய்வு பெற்ற விமானப்படை சிப்பாயெனத் தெரியவந்துள்ளது.

குறித்த தோட்டா தமக்குச் சொந்தமானது இல்லையென விசாரணைகளின்போது அவர் விமான நிலைய பாதுகாப்பு அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளார். (அ)

# இளைஞர்மீது தாக்குதல் 8 படை சிப்பாய்கள் கைது!

கொழும்பு, செப். 03

பண்டாரவளை, ரயில் நிலையத்தில் தமிழ் இளைஞர் ஒருவரை தாக்கி, குழப்பத்தில் ஈடுபட்டனர் எனக் கூறப்படும் எட்டு இராணுவ சிப்பாய்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ரயில் நிலைய அதிபரால், பண்டாரடவளை பொலிஸாருக்கு தொலைபேசி ஊடாக வழங்கப்பட்ட தகவலுக்கமையவே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பண்டாரவளை பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன் தினம் இரவு 8.30 மணியளவிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது எனவும் பொலிஸார் கூறினர்.

தியத்தலாவை இராணுவ முகாமியில் சேவையாற்றும் குறித்த இராணுவச் சிப்பாய்கள், விடுமுறையில் வீடு செல்லும் வழியிலேயே இவ்வாறு ஒழுக்கமற்ற விதத்தில் செயற்பட்டுள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

பதுளையில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த ரயில் பண்டாரவளை ரயில் நிலையத்தில் நிறுத்தப்பட்டுள்ளது. ரயில் நிலைய அலுவலக கடமையின் நிமித்தம் ரயில் புறப்படுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

அவ்வேளையில் ரயிலில் இருந்து இறங்கியுள்ள குறித்த இராணுவ சிப்பாய்கள், பாடல் பாடியுள்ளதுடன், கூச்சல் சத்தமும் எழுப்பியுள்ளனர். இதன்போது இவ்விடயத்தில் விழுந்திருந்த பணப் பையை அவர்களிடம் ஒப்படைப்பதற்கு இளைஞர் ஒருவர் சென்றுள்ளார்.

இதன்போது குறித்த தமிழ் இளைஞன் பணம் களவாடியுள்ளார் என் கூறி அவர்மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

ரயில் நிலைய அதிபரும், அங்கிருந்தவர்களும் தாக்குதலை தடுக்க சென்றவேளை, அவர்கள் மீதும் தாக்குதல் நடத்த முற்பட்டு, அடாவடியில் ஈடுபட்டுள்ளனர்.

இது தொடர்பில் பண்டாரவளை ரயில் நிலைய அதிபர் மற்றும் தாக்குதலுக்கு இலக்கான இளைஞர் ஆகியோரால் பண்டாரவளை பொலிஸ் நிலையத்தில் இரு முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

தாக்குதலுக்கு இலக்கான இளைஞன் பண்டாரவளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பண்டாரவளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியால் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (அ)

# இத்தாலியில் கொள்ளையடிக்க முயன்ற 32 வயது இலங்கையர்!

## கத்தியால் குத்தப்பட்டதில் வைத்தியசாலையில் அனுமதி

ரோம், செப். 03

இத்தாலியின் நேபிள்ஸ் நகரில் கொள்ளையடிக்க முயன்ற இலங்கையர் ஒருவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த தாக்குதல் நேபிள்ஸ் நகரத்தின் நன்கு அறியப்பட்ட பகுதியான விகோ டெசிடோரியில் இடம்பெற்றுள்ளது.

32 வயதான இலங்கையர் பெல்லெக்ரினியில் உள்ள அவசர சிகிச்சைப் பிரிவுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதன்போது இலங்கையர் கத்தியால் குத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

எவ்வாறாயினும், அதிர்ஷ்டவசமாக, அவருக்கு ஏற்பட்ட காயங்கள் தீவிரமானவை இல்லை எனவும் அவரின் உயிருக்கு ஆபத்தில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, குறித்த பகுதியில் அதேநாளில் 17 வயதான இளைஞன் மீதும் கத்திக் குத்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக விசாரணை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

குறித்த இளைஞன் தீவிரமான காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்படுகின்றது.

இந்நிலையில், சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் இந்த இரண்டு சம்பவங்களுக்கும் இடையே தொடர்பு இருக்கின்றதா? என்ற கோணத்தில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# எரிபொருள் நிரப்பு நிலையத்தை 'சீல்' வைப்பதற்கு நடவடிக்கை

கொழும்பு, செப். 03

கற்பிட்டி பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையமொன்றுக்கு சீல் வைப்பதற்கு இலங்கை கனியவள கூட் டுத்தாபனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெற்றோலுடன் மண்ணெண்ணெய் கலந்து விநியோகிக்கப்படுவதாகப் பொது மக்களிடம் இருந்து முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

அதன்படி, இலங்கை கனியவள கூட்டுத்தாபனத்தின் அதிகாரிகள் குழுவொன்று குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தை மேற்பார்வை செய்தது டன் அங்கிருந்து எரிபொருள் மாதிரிகளைப் பரிசோதனைக்காகப் பெற்றுக்கொள்ளப்பட்டது.

இதனையடுத்து குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தை சீல் வைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (அ)

# சட்டவிரோத தேர்தல் பிரசாரம் அதிகளவு முறைப்பாடுகள் பதிவு

கொழும்பு, செப். 03

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் சுதந்திரமானதும் நீதியானதுமான மக்கள் அமைப்பான கபே தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கு இதுவரை 435 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவற்றில் அதிகளவான முறைப்பாடுகள் சட்டவிரோத தேர்தல் பிரசார நடவடிக்கைகள் தொடர்பிலேயே பதிவாகியுள்ளதாக கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மனாஸ் மக்கின் தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தலின்போது கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக கபே அமைப்பு, 25 மாவட்டங்களிலும் 25 மாவட்ட இணைப்பாளர்கள் மற்றும் 160 நீண்டகால கண்காணிப்பாளர்களைக் கடமைகளில் ஈடுபடுத்தியுள்ளது.

தேர்தல் பிரசார நிதியினை கண்காணிப்பதற்காக 40 தேர்தல் தொகுதிகளில் 40 நீண்டகால கண்காணிப்பாளர்களை நிறுவி தேர்தல் பிரசாரத்திற்காக ஒவ்வொரு அரசியல் கட்சிகளும் அமைச்சர்களும் செலவு செய்கின்ற செலவு தொடர்பிலான கண்காணிப்பினை முன்னெடுத்து வருகின்றது.

அத்துடன், தேர்தல் தினத்தன்று கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக நாடளாவிய ரீதியில் 3,500 கண்காணிப்பாளர்களை கடமைகளில் ஈடுபடுத்தவுள்ளதாக கபே அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் மனாஸ் மக்கின் தெரிவித்துள்ளார். (அ)

# இலங்கை வரலாற்றில் முதன்முறையாக 16 அடி உயரக் கற்பக விநாயாகர் சிலை!

கொழும்பு, செப். 03

இலங்கை வரலாற்றில் முதன் முறையாக 16 அடி உயரம் கொண்ட இந்தியா தமிழ்நாடு பிள்ளையார்பட்டி கற்பக விநாயாகர் சிலையை ஒத்த சிலை புஸ்ஸல்லாவயில் பிரதிஷ்டை செய்வதற்கான பூமி பூஜை எதிர்வரும் 08 ஆம் திகதி இடம் பெறவுள்ளது.

முதல் கட்டமாக அன்றைய தினம் புதிதாக அமைக்கப்பட்ட வழி பிள்ளையருக்கான கும்பாபிஷேகம் இடம்பெறவுள்ளது.

06 ஆம் திகதி ஆரம்ப நிகழ்வு பூசைகளும் விநாயகர் பிரதிஷ்டையும் நடைபெறும்.

07 ஆம் திகதி பிள்ளையார் சதுர்த்தி தினத்தன்று எண்ணெய் காப்பும் இடம்பெறவுள்ளது.

பதினாறு அடி கொண்ட கற்பக விநாயகர் சிலை இந்தியா தமிழ்நாடு பிள்ளையார்பட்டி ஆலய வளாகத்தில் செதுக்கப்பட்டு வருகின்றது

கண்டி நுவரெலியா பிரதான பாதையில் புஸ்ஸல்லாவ நகரத்தை குறிக்கும் ஆரம்பப் பகுதியிலேயே இந்த சிலை பிரதிஷ்டை செய்யப்படவுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலமைப்பரிசில்...

11.15 மணிக்கு ஆரம்மாகி மதியம் 12.15 மணிக்கு நிறைவடையும்.

பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் அந்தந்த பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. பரீட்சார்த்திகளின் விவரங்களில் தவறுகள் காணப்பட்டால் எதிர்வரும் 9ஆம் திகதி வரை ஒன்லைன் முறையில் திருத்தங்களை செய்ய முடியும். www.doenets.lk my;yJ https://onlineexams.gov.lk/eic என்ற இணையத்தளங்களை பயன்படுத்த முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், 2 ஆயிரத்து 849 பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## கட்சி...

அத்துடன், கட்சி எடுத்துள்ள குறித்த தீர்மானத்தை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பது தொடர்பில் எதிர்வரும் கூட்டங்களில் ஆராயப்படும் என்றும் கூறினார்.

இதேநேரம், தமிழ் அரசுக் கட்சியாக தீர்மானம் எடுத்தாலும் அது எந்த அடிப்படையில் எடுக்கப்பட்டது என்பது தொடர்பில் தலைவரான தமக்கு தெரிவிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று நேற்று முன்தினம் அவர் கருத்து வெளியிட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## தமிழ் அரசு...

தெரிவித்தார்.

முன்னதாக, நேற்று முன்தினம் வவுனியாவில் விடுதி ஒன்றில் கூடிய தமிழ் அரசுக் கட்சியின் 30பேர் கொண்ட மத்திய குழு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளிப்பதாக அறிவித்தது. இந்த மத்திய குழுக்கூட்டத்தில் கட்சியின் தலைவர் மாவை சோ. சேனாதிராசா, சிறீதரன் ஆகியோர் பங்கேற்றிருக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ரூ.109...

என்று எழுப்பிய கேள்விக்கு பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தேர்தல் செலவுகள் தொடர்பான சட்டம் முன்னர் இருந்தன. இது 2023 ஆம் ஆண்டு 03 ஆம் இலக்க வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டது. தேர்தலில் செலவழிக்கப்படும் தொகையை தேர்தல் முடிந்து 31 நாட்களுக்குள் வழங்க வேண்டும். அதனை வழங்காமை, தவறான தகவல் களை வழங்குதல் ஆகிய இரண்டும் தண்டனைக்குரிய குற்றங்கள். குடியுரிமை பறிக்கப்பட்ட சம்பவங்கள் வரலாற்றில் நடைபெற்றுள்ளன என்றும் அவர் கூறினார்.

தேர்தல் முடிவடைந்த 21 நாட்களுக்குள் வேட்பாளர்கள் தங்களின் வருமானம் மற்றும் செலவு விவரங்களை தேர்தல் ஆணையத்திடம் தெரிவிக்க வேண்டும். தேர்தல் ஆணையம் செலவு விவரங்களை செய்தித்தாள் விளம்பரங்களிலும் இணையதளங்களிலும் பொது மக்கள் பார்வைக்கு வழங்கும். செலவின விவரங்கள் முரண்பாடாகவோ அல்லது தவறான தகவல்கள் வழங்கப்படுமாயின், மக்கள் பொலிஸில் முறைப்பாடு செய்து அதற்கு எதிராக எந்த நேரத்திலும் சட்ட நடவடிக்கை எடுக்க முடியும்.

அரசாங்க நிறுவனங்கள் மற்றும் தேர்தல் கண்காணிப்பு குழுக்கள் என பல்வேறு மட்டத்திலான குழுக்களை ஒன்று திரட்டி தேர்தல் செலவுகள் மற்றும் விபரங்களை அறிந்து கொள்ளும் வகையில் முறைமை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் பாராளுமன்ற பொதுத் தேர்தலில் செலவின முறைமை முற்றிலும் மாறுபட்டதாக இருக்கும். அதற்கான செலவு விவரங்கள், பணம் கொடுத்தவர்களின் பட்டியல், கொடுக்கப்பட்ட பணத்தின் அளவு மற்றும் முழுமையான அறிக்கைகள் தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கு வழங்கப்பட வேண்டும். அது மக்களுக்கு செய்யும் பெரும் சேவையாக இருக்கும் - என்றும் அவர் கூறினார். (ஐ)

## மருத்துவ...

ஒருதலைப்பட்சமான சுயாதீனமற்ற தொழில்நுட்ப அறிவற்ற விசாரணைக் குழுவின் செயல்பாடுகளுக்கு எதிராகவும் தொழிற்சங்க உரிமைகளை நசுக்கும் செயல்பாடுகளுக்கு எதிராகவுமே இந்தப் பணிப்புறக்கணிப்பு நடைபெறவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## தேர்தல்...

பயன்படுத்தப்படுகின்றன என்று பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

தேர்தல் சட்டத்தை மீற வேண்டாமென வேட்பாளர்களிடம் நான் கேட்டுக் கொள்கிறேன். சட்டத்தை மீறும் வேட்பாளர் பட்டியலிலிருந்து நீக்கப்படு வார். அவ்வாறில்லையெனின், சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டிவரும்.

இதேபோல, அரச ஊழியர்கள் தங்களுக்குரிய கடமையை மாத்திரம் செய்ய வேண்டும். அதனை விடுத்து தாம் ஆதரிக்கும் வேட்பாளரை பிரசாரப்படுத்தும் நோக்கில் நடவடிக்கைகளில் ஈடுபடுவது சட்டத்தின் பிரகாரம் குற்றமாகும். அவ்வாறு சட்டத்தை மீறும் அரச ஊழியர்களை பதவி நீக்குவதற்கும் அது காரணமாக அமையும்.

தேர்தல் ஆணைக்குழு தேர்தல் சட்டத்தின் பிரகாரம் கடமைகளை முன்னெடுக்கிறது. ஏதேனும், விதிமீறல் நடக்கும் பட்சத்தில் வேட்பாளர்களின் தகுதி தராதரம் பாராது, நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ஐ)

## தமிழ்...

நிகழ்வில் தமிழ்த் தேசியக் கட்சிக ளின் தலைவர்கள், தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பினர், மதத் தலை வர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள் எனப் பலர் பங்கேற்கவுள்ளனர். (ஐ)

## சிறீதரனின்...

கலந்து கொள்ள முடியாது என்று அறிவித்திருந்தார். சிறீதரன் தமது நிலைப்பாட்டை எழுத்து மூலமாகக் கூட்டத்துக்கு தெரியப்படுத்தி இருந்தார். சிறீதரனின் நிலைப்பாடு உள்ளிட்ட பல விடயங்கள் கருத்தில் கொள்ளப்பட்டே தீர்மானம் எடுக்கப்பட்டது.

அத்துடன், கட்சித் தலைவர் இல்லாமல் மத்திய செயற்குழு தீர்மானங்களை எடுக்கக்கூடாது என்று கட்சி யாப்பில் இல்லை. தீர்மானம் எடுப்பதற்குத் தேவையான கோரத்தை விட அதிகமான உறுப்பினர்கள் பங்குபற்றியிருந்தனர். இந்தநிலையில், சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பதற்கு கட்சியின் மத்திய குழு மேற்கொண்ட தீர்மானம் சரியானதே. இந்தத் தீர்மானம் உரிய தரப்பினருக்கு - உரிய வகையில் அறிவிக்கப்படும். இலங்கை தமிழ் அரசுக் கட்சி ஆதரவு தெரிவித்தாலும் நான் மேடைகளில் பங்குபற்றமாட்டேன். எனது முடிவை மக்கள் தீர்மானிக்க வேண்டும் - என்றார். (ஐ)

## அரச ஊழியர்களின்...

இதன்படியே இந்த சம்பள அதிகரிப்பு வழங்கப்படவுள்ளது.

பரிந்துரையின்படி,

அரச சேவையின் அலுவலக உதவியாளர் தரம் மூன்றுக்கு 5,450 ரூபாய், இரண்டாம் தரத்துக்கு 8,760 ரூபாய், தரம் ஒன்றுக்கு 10,950 ரூபாய் சம்பளம் அதிகரிக்கப்படும். இதன் உயர்தர சேவைகளுக்கு 13 ஆயிரத்து 980 ரூபாய் சம்பளம் அதிகரிக்கப்படும்.

இதேபோல் சாரதி சேவையின் மூன்றாம் தரத்தின் சம்பளம் 6,960 ரூபாயாலும், இரண்டாம் தரத்தின் சம்பளம் 9,990 ரூபாயாலும் முதலாம் தரத்துக்கு 13,020 ரூபாயாலும் விசேட தரத்துக்கு 16,340 ரூபாயாலும் உயர்த் தப்படும்.

மூன்றாம் நிலை சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு ரூ. 8,340 சம்பள உயர்வும், இரண்டாம் தரத்துக்கு ரூ.11,690 சம்பள உயர்வும், முதலாம் தரத்துக்கு ரூ.15,685 சம்பள உயர்வும் கிடைக்கும். முகாமைத்துவ சேவை அதிகாரி/முகாமைத்துவ உதவியாளர் தரம் மூன்றுக்கு ரூ. 10,140, தரம் இரண்டுக்கு ரூ.13,490, தரம் ஒன்றுக்கு ரூ. 17,550ஆல் உயரும்.

அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் மூன்றுக்கு 12,710 ரூபாயாலும் இரண்டாம் தரத்துக்கு ரூ.17,820, முதல் தரத்துக்கு ரூ. 25,150வினாலும் அதிகரிக்கப்படும்.

பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் குடும்ப சுகாதார பணியாளர் மூன்றாம் தரத்தின் சம்பளம் 12,885 ரூபாயாலும் இரண்டாம் தரத்துக்கு 17,945 ரூபாயாலும் முதலாம் தரத்துக்கு 25,275 ரூபாயாலும் அதிகரிக்கப்படும். கதிரியக்க நிபுணர் மற்றும் மருந்தாளர் மூன்றாம் தரத்துக்கு ரூ.13,280 சம்பள அதிகரிப்பும், இரண்டாம் தரத்துக்கு ரூ.18,310 சம்பள உயர்வும் முதலாம் தரத்துக்கு ரூ.25,720 சம்பள உயர்வும் கிடைக்கும்.

மூன்றாம் தர தாதியர் உத்தியோகத்தரின் சம்பளம் 13,725 ரூபாயாலும் இரண்டாம் தரத்துக்கு ரூ.18,835 சம்பள அதிகரிப்பும் முதலாம் தரத்தினருக்கு ரூ. 26,165 சம்பள உயர்வும் வழங்கப்படவுள்ளது.

அதிபர் சேவையின் மூன்றாம் தரத்தின் சம்பளம் 23,425 ரூபாயாலும், இரண்டாம் தரத்தின் சம்பளம் 29,935 ரூபாயாலும், மூன்றாம் தரத்துக்கு 39,595 ரூபாயாலும் அதிகரிக்கப்படும். ஆசிரியர் சேவையில் உள்ள கல்வியியல் கல்லூரி ஆசிரியர்களுக்கு ரூ.17,480 சம்பள உயர்வும் பட்டதாரி ஆசிரியர் களுக்கு ரூ. 19,055 அதிகரிப்பும், இரண் டாம் தரத்துக்கு ரூ. 20,425, முதல் தரத்துக்கு 38,020 ரூபாயும் முன்மொழியப்பட்டுள்ளது.

பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் சம்பள உயர்வாக ரூ. 10,704 பெறுவார். பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரின் சம்பள ரூ.13,210வினாலும் சப் - இன்ஸ்பெக்டர்களின் சம்பளம் ரூ. 14,050வினாலும் அதிகரிக்கப்படும். பொலிஸ் பரிசோதகரின் சம்பளம் ரூ.18,290, பிரதான பொலிஸ் பரிசோதகரின் சம்பளம் ரூ.23,685 அதிகரிக்கப்படவுள்ளது.

கிராம உத்தியோகத்தர் முதலாம் தர சம்பளம் 11,340 ரூபாயால் அதிகரிக்கப்படவுள்ளது. அந்த சேவையின் இரண்டாம் தரத்திற்கு ரூ.14,690, முதலாம் தரத்தினருக்கு ரூ.18,750 சம்பளம் அதிகரிக்கப்படவுள்ளது. நிர்வாக கிராம அதிகாரியின் சம்பளம் ரூ.23,575 அதிகரிக்கும்.

உதவிச் செயலாளர், உதவிப் பணிப்பாளர், கணக்காளர், உதவிப் பிரதேச செயலாளர், உதவி ஆணையா ளர் ஆகியோரின் சம்பளம் 28,885 ரூபாயால் அதிகரிக்கப்படும். பிரதி பணிப்பாளர் ,பிரதி ஆணையாளர்களின் ஆரம்ப சம்பளம் 43,865 ரூபாயால் அதிகரிக்கப்படவுள்ளது. பிரதேச செயலாளர், பணிப்பாளர், ஆணையாளர், சிரேஷ்ட உதவி செயலாளர் ஆகிய பதவிகளுக்கான சம்பளம் 57,545 ரூபாயால் அதிகரிக்கப்படவுள்ளது.

ஆரம்ப தர மருத்துவர்களின் சம்பளம் 35,560 ரூபாயால் அதிகரிக்கப் படும். இரண்டாம் தர மருத்துவர்களின் சம்பளம் ரூ.39,575 ஆல் அதிகரிக்கப்படவுள்ளது. முதலாம் தர மருத்துவர்களின் சம்பள அதிகரிப்பு 53,075 ரூபாயாலும், மேலதிக செயலாளர் மற்றும் விசேட மருத்துவர்களின் சம்பளம் 70,200 ரூபாயாலும் அதிகரிக்கப்படவுள்ளது.

உதவி செயலாளர், உதவிப் பணிப்பாளர், கணக்காளர், உதவிப் பிரதேச செயலாளர் மற்றும் உதவி ஆணையாளர் ஆகிய பதவிகளுக்கான சம்பளம் 28,885 ரூபாயால் அதிகரிக்கப்படவுள்ளது. பிரதிப் பணிப்பாளர் மற்றும் பிரதி ஆணையர்களின் அடிப்படைச் சம்பளம் 43,865 ரூபாயாலும் பிரதேச செயலாளர், பணிப்பாளர், ஆணையர், சிரேஷ்ட உதவிச் செயலர் பதவிகளுக்கான சம்பளம் ரூ.57,545 வினாலும் உயர்த்தப்படும்.

அத்துடன், ஆரம்ப நிலை சம்பளம் 35,560 ரூபாயாலும் இரண்டாம் நிலை சம்பளம் 39,575 ரூபாயாலும் அதிகரிக்கப்படவுள்ளது. முதலாம் நிலை மருத்துவர்களுக்கு 53,075 ரூபாயும் மேலதிக செயலாளர் மற்றும் விசேட மருத்துவர் பதவிகளுக்கு 70,200 ரூபாயும் சம்பள உயர்வு வழங்கப்படும்.

இதேசமயம், அனைத்து அரச ஊழியர்களுக்கும் வழங்கும் வருடாந்தம் சம்பள உயர்வுத் தொகையை இரட்டிப்பாக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது. மேலும், 2025 ஜனவரி 01 முதல் அரச நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள், பல்கலைக் கழகங்கள் மற்றும் பாதுகாப்பு படையினரின் சம்பளத்தை அதிகரிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## காணாமலாக்கப்பட்ட...

அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு கருத்து வெளியிட்ட அவர் மேலும் கூறுகையில்,

சமத்துவக் கட்சியும் ஐக்கிய மக்கள் சக்திக்கு ஆதரவளித்தமை ஆரோக்கியமாக உள்ளது. வடக்கில் அபிவிருத்திகள் செய்யப்பட வேண்டியுள்ளன. இதனால் பல எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்ய முடியும்.

அவ்வாறு பல திட்டங்களை செய்ய நாம் திட்டமிட்டுள்ளோம். மாகாண சபைகளுக்கான முழுமையான அதிகாரங்கள் வழங்கப்படும். வாழ்வாதரம் உள்ளிட்ட பல திட்டங்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும். அதற்காக சிறப்பு பணிமனைகள் 5 மாவட்டங்களிலும் நிறுவப்படும்.

இதேபோன்று ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவுகளிலும் அபிவிருத்தி நிலையங்கள் நிறுவப்படும். இங்குள்ள மக்கள் யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள். அவர்களுக்கு பல பிரச்னைகள் உள்ளன.

காணாமல் ஆக்கப்பட்டோருக்கு தீர்வை பெற்றுக்கொடுப்போம். அத்துடன், ஏனைய பிரச்னைகளுக்கும் தீர்வு பெற்றுக்கொடுப்போம். அதற்காகவே இந்தப் பணிமனைகளை மாவட்டம் மற்றும் பிரதேச செயலக ரீதியில் நிறுவவுள்ளோம். நானும் யுத்தத்தால் பாதிக்கப்பட்டவன் என்ற அடிப்படையில் தீர்வு பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற நிலைப்பாடு எனக்கு உள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் 4 பிரதேச செயலாளர் பிரிவுகள் உள்ளது. அந்த நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் ஒவ்வொரு தொழிற்பேட்டைகள் உருவாக்கப்படும். இதே போன்று நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் ஒவ்வொரு தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் நிறுவப்படும். அதன் மூலம் தொழில் வாய்ப்புகள் உருவாக்கி கொடுக்கப்படும் - என்றார். (ஐ)

## தமிழர்...

முதலீடுகள் மற்றும் சுதந்திரம் என்னும் 4 பிரிவுகளுக்குள் தனது நோக்கை நாமல் ராஜபக்ஷ வெளிப்படுத்தியுள்ளார்.

அந்தத் தேர்தல் அறிக்கையில்,

பிரிவினைவாத பயங்கரவாதத்தை தோற்கடித்து நாட்டின் ஒற்றையாட்சியை மகிந்த ராஜபக்ஷ பாதுகாத்தார். இருப்பினும், இன்றும் பிரிவினைவாத அரசியல் செயல்பாடுகள் பல்வேறு வடிவங்களில் நாட்டுக்கு சவால் விடுக்கின்றன. அந்த சவால்களை தோற்கடித்து நாட்டின் ஒற்றையாட்சியை பேணி பாதுகாப்பது எமது பிரதான கொள்கையாகும். அதற்கான சகல பாதுகாப்பு ஏற்பாடுகளையும் செயல்படுத்துவோம்.

அத்துடன், வலுவான வெளிநாட்டு கையிருப்பு, அரச வருமானம் உயர்வு - செலவு கட்டுப்பாடு, தேசிய அனர்த்த மையம், தொழிலின்மைக்கு நிலையான தீர்வு, பணவீக்கம் மற்றும் வட்டி வீதம் ஒற்றை இலக்கத்தில், சமூக அபிவிருத்தி உலகில் 50 நாடுகளுக்குள், கல்வி மறுசீரமைப்பு, உள்ளிட்ட பல துறைகள் குறித்து விசேட கவனம் செலுத்தப்படும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# மைத்திரிக்கு எதிராக மனு 27ஆம் திகதி பரிசீலனைக்கு

கொழும்பு,செப். 03

**நீதிமன்றத்தை அவமதித்ததாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவைப் பரிசீலிப்பதற்காக எதிர்வரும் 27ஆம் திகதி கூடுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.**

இந்த மனு நேற்று மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி சசி மகேந்திரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அப்போது, பிரதிவாதி மைத்திரிபால சிறிசேன சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி மைத்திரி குணரத்ன,

கொழும்பு மாவட்ட நீதிமன்றம் தனது கட்சிக்காரருக்கு சுதந்திரக் கட்சியின் தலைவராக சேவையாற்றுவதற்கு இடைக்காலத் தடை விதித்ததையடுத்து கட்சித் தலைவர் பதவியில் இருந்து விலகியதாக நீதிமன்றில் தெரிவித்தார்.

அதன்படி அவர் தொடர்ந்தும் தலைவராக செயற்படவில்லை எனவும் நீதிமன்ற உத்தரவை மீறி நீதிமன்றை அவமதிப்பு செய்யவில்லை எனவும் ஜனாதிபதி சட்டத்தரணி சுட்டிக்காட்டினார்.

அப்போது மனுதாரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி சாந்த ஜயவர்தன, நீதிமன்றில் கோரிக்கை விடுத்து, இந்த மனுவின் உண்மைகளை உறுதிப்படுத்தும் திகதியை கோரினார்.

அதன்படி, மனுவை பரிசீலிக்க இம்மாதம் 27ஆம் திகதிக்கு அழைப்பு விடுக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

சுதந்திரக் கட்சியின் செயற்குழு உறுப்பினர் மொண்டேகு சரத் சந்திரவினால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்பட்டதன் பின்னர் கட்சியின் தலைவராக மைத்திரிபால சிறிசேன செயற்பட்டுள்ளதாகவும் அதன் மூலம் நீதிமன்றத்தை அவமதித்துள்ளதாகவும் மனுதாரர் குறிப்பிட்டார்.

அதன்படி, மைத்திரிபால சிறிசேனவுக்கு உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும் எனவும் மனுதாரர் கோரியுள்ளார். (அ)

## பாராளுமன்றம் கலைந்தால் இரு மாதத்தில் வாக்கெடுப்பு

### தேர்தல் ஆணைக்குழு தெரிவிப்பு



கொழும்பு, செப். 03

உத்தியோகபூர்வ பாராளுமன்றத் தேர்தல் இடம்பெறுவதற்கு இன்னும் ஒருவருட காலம் எஞ்சியிருக்கின்ற நிலையில், எதிர்வரும் 21ஆம் திகதிக்கு முன்னரோ அல்லது பின்னரோ ஜனாதிபதியால் பாராளுமன்றம் கலைக்கப்படுமாக இருந்தால் குறைந்தது இரு மாத காலப்பகுதிக்குள் பாராளுமன்றத் தேர்தலை நடத்தியே ஆகவேண்டும் என்று தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன்ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எந்தவொரு சந்தர்ப்பத்திலாவது ஜனாதிபதி பாராளுமன்றத்தை கலைத்தால், கலைக்கும் தினத்திலிருந்து குறைந்தபட்சம் 66 நாட்களில் பாராளுமன்றத் தேர்தலை நடத்தியே ஆகவேண்டும். ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் என்றில்லை, எப்போது கலைத்தாலும் 66 நாட்களில் தேர்தல் நடத்தப்படும்.

அடுத்த பாராளுமன்றத் தேர்தல் உத்தியோகபூர்வமாக எதிர்வரும் 2025 ஓகஸ்ட் மாதத்துக்கு முன்னர் இடம்பெறவேண்டும். அதற்கமைய, எதிர்வரும் 21ஆம் திகதியின் பின்னர் ஜனாதிபதியினால் பாராளுமன்றம் கலைக்கப்படுமாக இருந்தால் இந்த குறுகிய நாட்களுக்குள் தேர்தலை நடத்த வேண்டும் - என்றார். (அ)


## 'நாராயணா' கோஷம் விண்ணதிர வல்லிபுர ஆழ்வாருக்கு கொடியேற்றம்!

வடமராட்சி, செப். 03

சரித்திரப் பிரசித்தி பெற்ற வடமராட்சி துன்னாலை வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நேற்று திங்கட்கிழமை மு.ப. 9.15 மணிக்கு கொடியேற்றத்துடன் பக்திபூர்வமாக ஆரம்பமானது.

கொடியேற்றத் திருவிழாவுக்கான அபிஷேகம் அதிகாலை 5.00 மணிக்கு ஆரம்பமானது. தொடர்ந்து காலை 7.30 மணியளவில் வசந்த மண்டபப் பூசை நடைபெற்று சுவாமி உள்வீதியுலா வந்து கொடித்தம்பம் அருகே எழுந்தருள மந்திர உச்சாடனங்கள் முழங்க - பக்தர்களின் "நாராயணா... மாயவா... கேசவா... வல்லிபுர நாதா" என்ற கோஷங்கள் விண்ணைப்பிளக்க பிரதமகுரு கொடியேற்றி வைத்தார்.

தொடர்ந்து 17 தினங்கள் நடைபெறும் இந்தப் பெருந்திருவிழாவில் எதிர்வரும் 12ஆம் திகதி பாம்புத் திருவிழாவும் மறுநாள் 13ஆம் திகதி கம்சன் திருவிழாவும் அடுத்தநாள் 14ஆம் திகதி வேட்டை திருவிழாவும் நடைபெறவுள்ளன. தொடர்ந்து, 15ஆம் திகதி சப்பை ரதத் திருவிழாவும் மறுநாள் 16ஆம் திகதி தேர்த் திருவிழாவும் அடுத்த நாளான 17ஆம் திகதி சமுத்திர தீர்த்தமும் 18ஆம் திகதி கேணித் தீர்த்தமும் நடைபெறவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-02)



## முன்னாள் எம்.பி தர்மலிங்கத்தின் நினைவுதினம் நேற்று அனுஷ்டிப்பு



யாழ்ப்பாணம், செப். 03

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வி.தர்மலிங்கத்தின் 39ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் தாவடியில் உள்ள அவரது நினைவுத் தூபியில் நேற்று காலை 7மணியளவில் வலிதெற்கு பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் றிச்சார்ட் தவப்பிரகாசம் தலைமையில் குறித்த நினைவஞ்சலிகள் இடம்பெற்றது.

இதன்போது நினைவுத் தூபிக்கு மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கல்வியற்துறை விரிவுரையாளர் இ.சர்வேஸ்வரா நினைவுப் பேருரையாற்றினார்.

குறித்த நினைவஞ்சலியில், வி.தர்மலிங்கத்தின் மகனும் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான த. சித்தார்த்தன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, வடமாகாண சபை முன்னாள் விவசாய அமைச்சர் க.சிவநேசன், வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், உள்ளூராட்சி சபைகளின் முன்னாள் தவிசாளர்கள், உள்ளூராட்சி சபை முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

23 வருடங்கள் மானிப்பாய் தொகுதி பாராளுமன்ற உறுப்பினராக இருந்த விஸ்வநாதர் தர்மலிங்கம் 1985 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 2 ஆம் திகதி படுகொலை செய்யப்பட்டதுடன் இதே நாளிலேயே கோப்பாய் தொகுதியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மு.ஆலாலசுந்தரமும் படுகொலை செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## சிறீகணேசன் பேராசிரியராக பதவிநிலை உயர்த்தப்பட்டார்!

### யாழ். பல்கலைக்கழகம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 03

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவர் பேராசிரியராக பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

கலைப்பீடத்தின் ஆங்கில மொழி கற்பித்தல் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளரான கலாநிதி கே. சிறீகணேசனே இவ்வாறு பேராசிரியராக பதவி உயர்த்தப்பட்டுள்ளார். இதற்கான ஒப்புதலை பல்கலைக்கழகப் பேரவை கடந்த சனிக்கிழமை வழங்கியது.

பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் கடந்த 30 ஆம் திகதி, சனிக்கிழமை துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தலைமையில் நடைபெற்றது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமங்களுக்கு அமையத் திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்த ஆங்கில மொழி கற்பித்தல் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கே. சிறீகணேசனின் மதிப்பீடு மற்றும் நேர்முகத் தேர்வு முடிவுகள் அன்றைய பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

இவற்றின் அடிப்படையில், ஆங்கில மொழி கற்பித்தல் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கே. சிறீகணேசன் ஆங்கில மொழி கற்பித்தலில் பேராசிரியராக பதவி உயர்த்தப்பட்டுள்ளார். (ஐ)

### தங்கம் கடத்தல்

## 3 இலங்கையர்கள் இந்தியாவில் கைது

கொழும்பு, செப். 03

தங்க கடத்தல் மோசடியில் ஈடுபட்ட மூன்று இலங்கை பிரஜைகள் இந்தியாவில் கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இந்தியாவில் பெங்களூர் நகரிலுள்ள கெம்பேகவுடா சர்வதேச விமான நிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த மூவரும் கொழும்பில் இருந்து கெம்பேகவுடா சர்வதேச விமான நிலையத்துக்கு சென்ற நிலையில் சுங்க அதிகாரிகளால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளனர்.

இதன்போது, ஆசன வாயிலில் தூள் போன்ற பொருட்களுடன் தங்கம் மறைத்து வைக்கப்பட்டிருந்ததை சுங்க அதிகாரிகள் மீட்டுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட தங்கத்தின் மொத்த எடை 1,670.92 கிராம் ஆகும். இதன் மொத்த இலங்கை மதிப்பு 42,528,927 ரூபாய் (11,900,000 இந்திய மதிப்பு) ஆகும். (அ)

## பெரிய வெங்காய இறக்குமதி; பெரும் சிக்கலில் விவசாயிகள்!

கொழும்பு, செப். 03

பெரிய வெங்காயம் இறக்குமதியால் பெரும் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளதாக பெரிய வெங்காய விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ பெரிய வெங்காயத்தின் விலை 120 முதல் 150 ரூபா வரை உள்ளது.

இதனால், உள்ளூர் பெரிய வெங்காயத்தின் விலை குறையும் அபாயம் உள்ளதாகவும் அவர்கள் கூறினர்.

இது குறித்து உரிய அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என பெரிய வெங்காய விவசாயிகள் குறிப்பிட்டனர்.

இதன் காரணமாக இறக்குமதி செய்யப்படும் பெரிய வெங்காயத்திற்கு விசேட வரி விதிக்குமாறு பெரிய வெங்காய விவசாயிகள் உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 03.09.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.